பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 26 திங்கட்கிழமை (13-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:319

## தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டை முடுக்கிவிட 15 பேர் கொண்ட குழு

யாழ்ப்பாணம்,ஒக்.13

தமிழர்களின் பழம்பெரும் கட்சியான தமிழரசுக்கட்சி மீண்டும் முழுமையான அரசியல் கட்சியாக செயற்படவுள்ளது. கட்சியை ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முழு வீச்சில் ஆரம்பிப்பதற்காக பதினைந்து பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சியின் தீவிர ஆதரவாளர்கள் பலர் இக்கூட்டத்திற்கு வருகைதந்திருந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இக்கூட்டம் கூட்டப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியை ஸ்திரப்படுத்தி அதனை சரியான பாதையில் வழிநடத்துவதற்காகவே தமிழரசுக் கட்சியை முழு அளவில் புனரமைத்து இயக்குவதற்கு முடிவு செய்யப்

(13ஆம் பக்கம் பார்க்க)

### மாம்பழம் சந்தி விபத்துச் சம்பவம்:

## கைதான பத்துப் பேருக்கும் இன்றுவரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.13

அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற விபத்தை அடுத்து அங்கு ஏற்பட்ட களேபரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பத்துப்பேர் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் களேபரத்தை அடுத்து யாழ்பொலீஸார் பத்துப் பேரைக் கைது செய்திருந்தனர். இவர்கள் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இராணுவம் மற்றும் பொலீஸாருக்கு கல்வீச்சு நடத்தியமை, கண்காணிப்புக் குழுவின் வாகனத்தைச் சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் ஆஜர் செய்யப்பட்ட இவர்

(14ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ வாகன விபத்துக்கள் பற்றி ஆராய விசாரணைக்குழு யாழ்.வரும்

## மாம்பழம் சந்தி விபத்து, தாக்குதல் சம்பவங்களைக் கண்டித்து கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் ஊடகவியலாளர்கள் மறியல்

கொழும்பு, ஒக்ரோபர்13

**யாழ்ப்பாணத்தில் இராணுவ வாகன விபத்துக்கள் அதிகரித்து வருவதால் அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசாரணைக் குழு ஒன்று கொழும்பிலிருந்து அவசரமாக வருகை தரவுள்ளது.**

**அதேவேளை, நேற்றுமுன்தினம் அரியாலை மாம்பழம் சந்தியில் இராணுவ வாகனம் ஒன்று ஓட்டோ ஒன்றை மோதி அதைச் சுக்குநூறாக்கியதை அடுத்து செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் படையினரால் தாக்கப்பட்டதைக் கண்டித்து ஊடகவியலாளர்கள் நல்லூரில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன் நேற்று மறியற்போராட்டம் நடத்தினர்.**

யாழ்.நகரில் அடிக்கடி இடம்பெற்றுவரும் இராணுவ வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை நடத்தி பாரபட்சமற்ற அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ விசாரணைக்குழுவைப் பணித்திருக்கிறார்.

இராணுவ வாகன விபத்துக்களால் படையினர் - பொதுமக்கள் உறவு பாதிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்களுக்கு இடமளிக்காமல் தடுப்பது தொடர்பாக ஆராயும் பொருட்டே விசாரணைக்குழு அனுப்பப்பட்டிருக்கிறது.

இராணுவ வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரங்கள், அவை வழங்கப்பட்ட முறை மற்றும் தகுதியற்றவர்கள் வாகனங்களைச் செலுத்துதல் ஆகியவை தொடர்பாக இக்குழுவினர் விசாரணைகளை நடத்துவர்.

விசாரணைக்குழுவினருக்கு சகல ஒத்துழைப்புகளையும் வழங்குமாறும், யாழ்.இராணுவத் தளபதியைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பணித்திருக்கிறார்.



கண்காணிப்புக் குழு அலுவலக முன்பாக ஊடகவியலாளர்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### பல்கலைக் கழகத்தினுள்

## ஆயுதத்தோடு வரக்கூடாது!

### மாணவர் ஒன்றியம் மீண்டும் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

படையினரோ, பொலீஸாரோ பல்கலைக்கழக வளாகத்தினுள் ஆயுதங்களோடு வரக்கூடாது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மீண்டும் இவ்வாறு அறிவித்திருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காக தென்னிலங்கையிலிருந்து வருகைதந்திருந்த அதி

(14ஆம் பக்கம் பார்க்க)

### மாம்பழம் சந்தி வீதி விபத்துச் சம்பவம்:

## ஓட்டோச் சாரதியிடம் லைசென்ஸ் இல்லை! அதனால் விபத்துக்கு அவரே காரணமாம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் சம்பந்தப்பட்ட ஓட்டோச் சாரதியிடம் சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) மற்றும் அவரது ஓட்டோவுக்கான வரிப்பத்திரம் என்பன இருக்கவில்லை என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்திருக்கிறது. அதனால், இந்த விபத்து ஏற்படுவதற்கு ஓட்டோ சாரதியே காரணமாக இருந்திருக்கிறார்.

யாழ்.பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸார் இவ்வாறு தெரிவித்திருக்கின்றனர்.

விபத்தின்போது காயங்களுக்கு இலக்கான ஓட்டோச் சாரதி சிகிச்சைக்காக நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

பொலீஸார் அவரிடம் நேற்று ஆஸ்பத்திரியில் வைத்து பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டனர்.

ஓட்டோச் சாரதியிடம் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகளின

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஊடக விருது வழங்கும் விழாவில் மகேஸ்வரன் 'உதயன்' மீது அபாண்டமான குற்றச்சாட்டு!



யாழ்ப்பாணம்,ஒக்.13

'உதயன்' - 'சுடர் ஒளி' பத்திரிகைகள் மீதும் அதன் நிர்வாகி மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறார் அமைச்சர் தி.மகேஸ்வரன்.

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருது வழங்கும் விழா நேற்றுமாலை கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்றது. அதில், பிரதம அதிதிகளில் ஒருவராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அந்த மேடையை 'உதயன்' - 'சுடர் ஒளி' நிறுவனங்களையும், அதன் நிர்வாக இயக்குநரையும் பெயர் குறிப்பிடாமல் - அபாண்டமான பொய்களைக் கூறி - விமர்சிப்பதற்குப் பயன்படுத்தினார் அமைச்சர் மகேஸ்வரன்.

அவ்வாறு அவர் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் வருமாறு:-

1. ஒருசில பத்திரிகை நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களை ஊடகவியலாளர் சங்கங்களில் இணையவிடாது அடக்கிவருகின்றன. அவர்களுக்கும் சுதந்திரம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

2. இருபது மாதங்களாக இந்து சமய விவகார அமைச்சராகவிருக்கும் நான், நல்லூர் திருவிழாக் காலத்தில் ஆலய சுற்றாடலில் காரில் பவனி போனேன் என்றும் அதனால் பக்தர்கள் விசனமடைந்தனர் என்றும் சாரப்பட அந்த நிறுவனம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

3. யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட இந்துசமய நிறுவன உயர் அலுவலர் ஒருவரை தமிழகத்தில் பாலியல் விவகாரங்கள தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருக்கும் பிரேமானந்தா சுவாமியுடன் ஒப்பிட்டு இப்பத்திரிகை விமர்சித்திருந்தது. ஆனால், அந்தப் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாகி தனது மனைவி சகிதம் பிரேமானந்தா சுவாமியின் காலில் வீழ்ந்து வணங்கும் படம் ஒன்றை ஓர் அன்பர் அடுத்தவாரம் எனக்கு அனுப்பிவைத்திருந்தார். அந்தப் படத்தை வேறு ஏதேனும் ஒரு பத்திரிகையில் பிரசுரித்து உண்மையை அம்பலப்படுத்தும்படி அந்த அன்பர் என்னைக் கேட்டுக்கொண்டார்.

- இதுவே அமைச்சர் மகேஸ்வரன் திருவாய் மலர்ந்து குறிப்பிட்ட அபாண்டமான பொய்கள்.

அமைச்சர் மகேஸ்வரனின் இத்தகைய சவடால்தனமான பொய்ப் பேச்சுகளை மக்கள் கண்டுகொள்ளாவிட்டாலும்கூட சிலவற்றை அம்பலப்படுத்துவது கட்டாயமானது. எனவே, உதயன் பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறான்.

1. தனது பத்திரிகையாளர்கள் எவரையும் எந்த ஊடகவியலாளர் சங்கத்திலும் சேரும்படியோ அல்லது சேரக்கூடாது என்றோ 'உதயன்' நிர்வாகம் வற்புறுத்தவும் இல்லை. அதில் தலை

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆஸ்பத்திரியில் சுகாதாரச் சீர்கேடுகள்: போரைக் காரணம் காட்டுகின்றது நிர்வாகம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

'யாழ்.போதனா வைத்தியசாலையின் சுகாதார நிலைமை படுமோசம்' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்தியில் உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகரும், மருத்துவபீட வருகை விரிவுரையாளருமான டாக்டர் என்.சிவராஜா வெளியிட்ட தகவல்கள் தொடர்பாக யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் விளக்க அறிக்கை ஒன்றை உதயனுக்கு அனுப்பிவைத்திருக்கின்றார்.

அவரது அந்த நீண்ட அறிக்கை இங்கு அப்படியே முழுமையாகப் பிரசுரமாகின்றது.

12-10-2003 உதயன் நாளிதழில் 'போதனா வைத்தியசாலையின் சுகாதார நிலைமை படுமோசம் - மருத்துவபீட விரிவுரையாளர் தெரிவிப்பு' என்ற தலைப்பில் முதலாம் பக்கத்தில் கட்டம் கட்டப்பட்ட செய்தியாக வெளிவந்த கருத்துக்கள் சம்பந்தமாக, யாழ்.போதனா வைத்தியசாலையின் உண்மை நிலைப்பாட்டினை தெரிவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியுள்ளது.

2001 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் இவ்வைத்தியசாலையின் மலசலகூடக் கழிவுகள் முறையாகத் தொற்றுநீக்கம் செய்யப்படும் செயல்முறைக்கு உட்படுத்தப்படாது, வைத்தியசாலைக்கு வெளியே கழிவு வாய்க்கால்கள் மூலம் வெளியேற்றப்பட்டன. தொடர்ச்சியாக சுகாதாரத் திணைக்களத்துடன் நாம் செய்துகொண்ட முறைப்பாடுகளின் பயனாக இக்கழிவு அகற்றும் செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு தற்போது இக்கழிவுகள் முறையாகச் சுழற்சிமுறையில் சுத்திகரிக்கப்பட்டு பண்ணையில் உள்ள இயந்திரசாதனங்களின் உதவியுடன் வெளியேற்றப்படுகின்றன.இந்தமுறையில் தொற்றுநீக்கம் செய்யப்பட்டு உலரவிடப்படும் மலசக்கைகள் பசளைகளாக உபயோகிக்கப்படவேண்டும். இத்திட்டம் எந்தவிதமான பழுதுகளும் இன்றி தொடர்ந்து இயங்கிவருகின்றது.

வைத்தியசாலையினுள் உள்சேகரிக்கப்படும் தொற்றுக்கொண்ட, பொதுவான கழிவுகள் யாவும் வேறுவேறாகச் சேகரிக்கப்பட்டு எரியூட்டியில் போட்டு எரிக்கப்பட வேண்டியதே முறையானது ஆகும். இவற்றில் தொற்றுள்ள கழிவுகளில் பெரும்பாலானவை தனியாகச் சேகரிக்கப்பட்டு கிடங்கு ஒன்றில் போட்டு எரியூட்டப்படுகின்றது. வைத்தியசாலையின் உள்ளிருந்த சகல கழிவுகளையும் எரிக்கக்கூடிய எரியூட்டி யுத்தம் காரணமாக சிதைவடைந்து மீள் நிர்மாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் அவசியம் பற்றி நாம் பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள், உள்நாட்டு அமைப்புக்கள், உலக சுகாதார நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரிடம் சுட்டிக்காட்டி உதவி கோரினோம். இது சம்பந்தமாக சாதகமான பிரதிபலிப்புகள் எதுவும் நிறைவேறாமையால் சுகாதாரத் திணைக்களத்துடன் நாம் எடுத்த தொடர்முயற்சி கைகூடியுள்ளது. தற்போது இதற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு பொருத்தமான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, எரியூட்டி கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்ந்து இடம்பெற்ற யுத்தம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு, செயற்பாடுகள் என்பவற்றில் பாரிய பின்னடைவுகளை எதிர்கொண்டமை யாவரும் அறிந்ததேயாகும். சமாதானச் சூழலின் பின் இந்நிலை முன்னேறி சிறிது சிறிதாக புனர்நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுவருவது கண்கூடு. இவ்வாறான ஒரு நிலை யுத்தத்தின் பின் இயல்பானதும் எமது முழுமையான கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதுமாகும். சுகாதாரம் சார்ந்த துறைசார் நிபுணர்கள் எமது வைத்தியசாலைக்கு வருகைதந்துள்ள போதெல்லாம் நாம் இக்குறைபாடுகளை நிவர்த்திக்க ஆலோசனைகளையும், உதவிகளையும் தொடர்ந்து கோரி வந்துள்ளோம். கடந்த 40 வருடங்களுக்கு மேலாக பகிரங்க சுகாதாரம் சம்பந்தமாக பொறுப்பான பதவிகளை வகித்தவர்கள் இக்குறைபாடுகளை நிவர்த்திக்க தங்கள் ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி நிலைமையினை சீர்செய்ய எம்முடன் சேர்ந்து செயற்படுவதே சமூக முன்னேற்றத்துக்கான ஆரோக்கியமான செயற்பாடாகும்.

உலக சுகாதார நிறுவன ஆலோசகசர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா அவர்களுக்கும் இந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் எமது தொற்றுக் கட்டுப்பாட்டுத் தாதி தர்மரெத்தினத்தினால் எமது ஒப்புதலின் பிரகாரம் கழிவுகள் அகற்றும் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. இதன்மூலம், வைத்தியசாலையில் வெளியகற்றப்படும் கழிவுகளை முறையான தொழில்நுட்பங்களின் பிரகாரம் அகற்றுவதற்குரிய வழிவகைகள், நிதயுதவிகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற கோதாவிலேயே இவ்விடயம் இவரிடம் முன்வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தின் உயர் திட்டமிடல், செயலாற்றல் சம்பந்தமான பட்டறையில் குறிப்பிட்ட பிரச்சினையினை வெளிப்படுத்து முன்பதாக எம்முன் இதுபற்றித் தெரியப்படுத்தி ஒத்துழைத்து இதனை நிவர்த்திக்க தனது முழுமையான பங்களிப்பினை நல்கியிருந்தால் அது பொருத்தமாக இருந்திருக்கும். பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியின் தொனிப்பு நிலைமை இருந்ததைவிட படுமோசமாக உள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உண்மையில் நிலைமை முன்னேறிக்கொண்டு வருவதை பக்கச்சார்பின்றி இந்தப் பிரச்சினையை அணுகுபவர்கள் அறிவர்.

- இவ்வாறு பணிப்பாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆஸ்பத்திரி சுகாதார நிலைமை: ஆராய்வதற்கு விசேட கூட்டம்

### அரச அதிபர் கூட்டுகின்றார்

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ். போதனா வைத்தியசாலையில் மோசமடைந்துள்ள சுகாதார நிலைமைகளைச் சீராக்க எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் இவ்வாரம் கூட்டம் ஒன்றைக் கூட்டவிருக்கின்றார்.

யாழ். செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பட்டறை ஒன்றில் வைத்தியசாலையின் சுகாதார நிலைமை படுமோசமான கட்டத்தில் உள்ளது என்று உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் என்சிவராஜா அதிர்ச்சித் தகவல் வெளியிட்டிருந்தார்.

அதனையடுத்து ஆஸ்பத்திரி சுகாதார நிலையை சீராக்குவதற்கு சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவிகளை நாடுவது தொடர்பாகவும் -

ஆஸ்பத்திரி குடிதண்ணீரில் நைதரசன் செறிவு கூடுதலாக இருப்பதால், அதைத் தவிர்க்கும் திட்டம் தொடர்பாகவும் - ஆராய்வதற்காக கூட்டம் ஒன்றை அரச அதிபர் ஏற்பாடு செய்துள்ளார். (ஐ-3)

## சத்ய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் போக்குவரத்து விழிப்புணர்வு வாரம் நவம்பர் 1 முதல் 7 வரை அனுஷ்டிக்கப்படும்

### விபத்துக்களைத் தடுக்க தீவிர, பிரசாரத்துக்கும் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.13

குடாநாட்டில் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தின் போக்குவரத்து விதிகள் மற்றும் விபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு ஒன்றினை முன்னெடுக்கவிருக்கின்றனர்.

இந்தச் செயற்பாடு தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெற்றது.

வடபிராந்திய சாயி நிலைய ஆலோசகர் செ.சிவஞானம், வடபிராந்திய சாயி நிலையங்களின் தலைவர் ஆர்.வசந்தசேனன், சாயி இளைஞர் சேவைகள் இணைப்பாளர் டாக்டர் கணேசமூர்த்தி ஆகியோர் உட்பட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

அந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். குடாநாட்டில் வீதி விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. வாகனங்களைச் செலுத்துவோர் உரிய வயதை அடைவதற்கு முன்னரே 'லைசென்ஸ்' பெற்றுக்கொள்ளாமல் வாகனங்களைச் செலுத்த முற்படுகின்றனர்.

இதுவே குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்குரிய பிரதானமான காரணி என்று கூறலாம்.

சிறுவயதிலேயே தமது பிள்ளைகளுக்கு மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுக்கின்றனர் அவர்களது பெற்றோர். சிறுவர்கள் பலர் போக்குவரத்து விதிமுறைகள் எதுவும் தெரியாமல் தமது இஸ்ரப்படி மிகுந்த வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் செல்கின்றனர்.

இத்தகையவர்களும் விபத்து அதிகரிப்பிற்கு காரணமாகின்றனர். இது தொடர்பாக உரிய விளக்கங்களையும் விழிப்புணர்வையும் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு வழங்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

இந்த விடயத்தில் பெற்றோரும் தமது பிள்ளைகள் மீது உரிய அக்கறை செலுத்தி அவர்களை விபத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்கு உதவவேண்டும்.

இதற்கென யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையம் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை போக்குவரத்து பாதுகாப்பு விழிப்புணர்ச்சி வாரமாக அனுஷ்டிக்கவுள்ளது.

இந்த 7 நாள்களும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகள் மற்றும் பாடசாலைகளில் போக்குவரத்து விதிகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் துண்டுப் பிரசுரங்கள் பலவும் வெளியிடப்படுகின்றன. பாடசாலை மாணவர்களைக் கொண்டு பிரதான சந்திகளில் போக்குவரத்து கடமைகளை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளும் போக்குவரத்து பாதுகாப்பு விழிப்புணர்வு வாரத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

- இவ்வாறு அங்கு தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## அரசுக்கான எந்த ஒரு சவாலையும் சமாளிக்க அமைச்சர்கள் நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களுக்கு உஷார் உத்தரவு!

கொழும்பு,ஒக்.13

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் பிரதான எதிர்க்கட்சிக்கும் இடையிலான மோதல் வலுவடைந்து வருவதையடுத்து, ஐ.தே.க. தனது அமைச்சர்களையும் நாடாளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களையும் உசார் படுத்தியுள்ளது. அரசியலில் ஏற்படக் கூடிய எந்தவொரு நிலைமையையும் எதிர்நோக்கத் தயாராக இருக்குமாறு அவர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

அரசில் மாற்றங்கள் நிகழும் என்று சுதந்திரக்கட்சித் தலைவர்கள் பலர் இப்பொழுது தினமும் ஆருடங்கள் கூறிவருவது தெரிந்ததே. எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தின்போது அல்லது ஜனவரி மாதத்துக்கு முன்னர் புதிய அரசு அமைக்கப்படும் என்று அவர்கள் கூறிவருகின்றனர்.

இதனால், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை கொழும்பில் இருக்கும் அவசியம் இல்லாவிடில் அவரவர் தொகுதிகளிலேயே தங்கியிருக்குமாறு கட்சித் தலைமைப்பீடம் கோரியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, அமைச்சர்கள், நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணங்களையும் ரத்துச் செய்வதென ஐ.தே.க. தீர்மானித்திருக்கிறது. வெளிநாட்டுப் பயணங்களுக்கான அனுமதியை இனிப் பிரதமரே வழங்குவார் என்று கட்சியின் சிரேஷ்ட அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது முன்னணிக் கட்சிகள் தமது ஆதரவை வழங்காது விடும் நிலை ஏற்படுமேயானால் ஐதேக. வாக்குகள் அனைத்தும் ஒன்று திரட்டப்படுவது அவசியமென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### அடையாள அட்டை தவறிவிட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.13

வி.சேரன் என்பவரின் அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் என்பன நேற்று தட்டாதெரு சந்திக்கும் யாழ். நகருக்கும் இடையே தவறிவிட்டன என்றும் -

அவற்றைக் கண்டெடுப்போர் கோண்டாவில் பொற்பதி வீதியில் உள்ள தமது அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

### செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.13

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளைமறுதினம் புதன்கிழமை முதல் மூன்று தினங்கள் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் புதன்கிழமை இடைநிலை, உயர்நிலை பிரிவுகளுக்கான குணநல உள்ளீடுகள் தொடர்பான செயலமர்வும் -

16 ஆம் திகதி வியாழக்கிழமை தரம் 10, 11 வகுப்புகளுக்கான விஞ்ஞான பாட பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயலமர்வும் -

17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்ப நிலைப் பிரிவுக்கான குணநல உள்ளீடு தொடர்பான செயலமர்வும் - இடம்பெறும்.

குணநல உள்ளீடு தொடர்பான இடைநிலை, உயர் நிலை பிரிவு செயலமர்வுக்கு பாடசாலையின் நிதி நடவடிக்கைக்குப் பொறுப்பான ஆசிரியரும், ஆரம்பப்பிரிவு செயலமர்வுகளுக்கு தலை[illegible] ஆசிரியரும் கலந்துகொள்ள வேண்டுமென [illegible] பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-117)

### புராண படனம்

தென்மராட்சி,ஒக்.13

சாவகச்சேரி வடக்கு சித்திர வேலாயுதர் ஆலயத்தில் கந்தபுராணப் படனம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 90 தினங்கள் நடைபெற்று திருக்கார்த்திகை உற்சவத்துடன் இந்தப்புராண படனம் நிறைவுபெறும்.

இதேவேளை - ஆலய இந்து மன்றத்தினரால் நவராத்திரி விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கந்தபுராண படனம் பூர்த்தி விழாவன்று பரிசில்கள் வழங்கப்படுமென மன்றச் செயலாளர் யோ.செந்திமயூரன் அறிவித்துள்ளார் (எ-117)

## அமெரிக்க அமைப்புக்கு புலிகள் வரி விலக்கு

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை அமெரிக்கா மீண்டும் நீடித்திருக்கின்ற போதிலும் அமெரிக்க அமைப்பொன்றின் மனிதாபிமான உதவிகள் மீதான வரியை விடுதலைப் புலிகள் நீக்கியிருக்கின்றனர் என்று அறியப்படுகிறது.

யு.எஸ்.எய்ட் (சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க அமைப்பு) என்னும் அந்த அமைப்பு, யாழ். அரச அதிபர் ஊடாக விடுதலைப் புலிகளுடன் மறைமுகமாகத் தொடர்புகொண்டதையடுத்தே வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஏனைய வெளிநாட்டு அமைப்புக்களும் அரச சார்பற்ற அமைப்புக்களும் வடக்கிற்கு பொருள்களை அனுப்புவது குறித்து புலிகள் இயக்கத்தின் அனுமதியைக்கோரி, வரிவிலக்குப் பெற்றிருக்கின்றன. ஆயினும், புலிகள் இயக்கம் மீதான அமெரிக்காவின் தடைகாரணமாக யு.எஸ்.எய்ட் அமைப்புப் பிரதிநிதிகள் புலிகள் இயக்கத்துடன நேரடியாகத் தொடர்புகொள்ள முடியவில்லை. இதனால், கடந்த பல மாதங்களாக மறைமுகத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

இதனையடுத்து, கல்வி உபகரணங்களையும், காரைநகருக்கு மீன்பிடி வலைகளையும் வரியின்றி [illegible] அந்த அமைப்புக்குப் புலிகள் [illegible] மதி வழங்கியுள்ளனர். (ஐ)

## எழுதுமட்டுவாழ் உப தபாலகம் மிருசுவிலில் விரைவில் இயங்கும்

2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் பருத்தித்துறையில் இயங்கிவரும் எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகம் விரைவில் மிருசுவில் பகுதியில் உள்ள தனியார் கட்டடத்தில் இயங்கவுள்ளது.


இதற்கான சகல ஏற்பாடுகளையும் வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இந்த உப அஞ்சல் அலுவலகத்தின் அஞ்சல் விநியோக எல்லைக்குட்பட்ட முகமாலை, இந்திராபுரம், கிள்ாலி, ஒட்டுவெளி, கரம்பகம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தற்காலிக கொட்டில்களிலும், உறவினர் வீடுகளிலும் வசித்துவருகின்றனர்.

எழுதுமட்டுவாழ் வடக்கு, மருதங்குளம் பகுதியில் மட்டும் 80 வீதமானோர் மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் அண்மையில் மிருசுவில் பகுதிக்கு விஜயஞ்செய்து உப அஞ்சல் அலுவலகம் இயங்கவுள்ள கட்டடத்தை பார்வையிட்டும் சென்றுள்ளனர். (எ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்தனர். சி.ஐ.ஏ. அதிகாரிகள் உட்பட அமெரிக்கர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குள் நுழைந்த கார் வெடித்துச் சிதறியதில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது. இக்குண்டு வெடிப்பு நடந்த இடத்தை படத்தில் காணலாம்.

# ஈராக்கிலிருந்து எண்ணெய் கடத்திய கினியா நாட்டுக் கப்பல் பிடிபட்டது

லண்டன்,ஒக்.13

ஈராக்கில் இருந்து சட்டவிரோதமாக எண்ணெய் கடத்திச் சென்ற கினியா நாட்டுக் கப்பலை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் ஈராக்கைக் கைப்பற்றிய பின்னர் அங்கு சட்டம், ஒழுங்கு மிகவும் சீர்குலைந்தது. அத்துடன், ஈராக்கில் இருந்து சட்டவிரோதமாக எண்ணெய் கடத்துவதும் அதிகரித்துள்ளது. இப்படி ஈராக்கில் இருந்து சட்ட விரோதமாக எண்ணெய் கடத்திய 10 படகுகளைக் கடந்தவாரம் அமெரிக்கப் படையினர் கைப்பற்றினர்.

இந்நிலையில், ஈராக்கிலிருந்து சட்ட விரோதமாக எண்ணெய் ஏற்றிச்சென்ற கினியா நாட்டுக் கப்பல், அமெரிக்க கூட்டுக் கடற்படையினர் நடத்திய அதிரடிவேட்டையில் கைப்பற்றப்பட்டது.

இதுதொடர்பாக பிரிட்டிஷ் இராணுவ அமைச்சகம் கூறியதாவது:-

ஈராக்கில் அபு பிளஸ் துறைமுகத்தில் இருந்து கினியா நாட்டைச் சேர்ந்த எம்.வி.மார்வான் என்ற கப்பல் ஆயிரத்து 800 பரல்கள் நிரம்பிய எண்ணெயை சட்டவிரோதமாக ஏற்றிச் சென்றபோது பிடிபட்டது. வடக்கு அரேபியன் கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த இந்தக் கப்பலை அமெரிக்க கூட்டுக் கடற்படையினர் வழிமறித்து சோதனை நடத்தியதில் சட்ட விரோதமாக எண்ணெய் எடுத்துச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டது. சிறை பிடிக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல் ஈராக் நீதித்துறையின் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

# பாலி தீவு குண்டுவெடிப்பின் ஓராண்டு பூர்த்தி அனுஷ்டிப்பு!

பாலி,ஒக்.13

இந்தோனேசியாவின் பாலி தீவில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்பின் ஓராண்டு நினைவுதினம் நேற்று அங்கு அனுஷ்டிக்கப்பட்டது. ஆஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹோவாட் மற்றும் பல பிரமுகர்கள் நிகழ்வில் கலந்து அஞ்சலி செலுத்தினர். அஞ்சலி நிகழ்வை முன்னிட்டு அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இக்குண்டுவெடிப்பில் 202 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 88 பேர் ஆஸ்திரேலியர்கள். இதனால், அஞ்சலி நிகழ்வில் பெருமளவிலான ஆஸ்திரேலியர்கள் கலந்துகொண்டனர்.

நேற்றுக்காலை ஆரம்பித்த அஞ்சலி நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர்.

குண்டுவெடித்த விடுதியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் படங்களும், நினைவுக் குறிப்புகளும் அவ்விடத்தில் எழுதிவைக்கப்பட்டிருந்தன.

அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டோரில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவர்கள். அங்கு முஸ்லிம்களும், இந்துக்களும் பிரசன்னமாகியிருந்தனர்.



பாலி குண்டுவெடிப்பில் இறந்துபோன தமது உறவினரை, ஓராண்டு நினைவுதின நிகழ்வில் எண்ணிக்கலங்கும் ஆஸ்திரேலிய குடும்பம் ஒன்று.

# எகிப்திய இரட்டையரைப் பிரிக்கும் சிகிச்சை வெற்றிகரமாக ஆரம்பம்

லண்டன்,ஒக்.13

தலைகள் ஒட்டிப் பிறந்த எகிப்திய இரட்டைக் குழந்தைகளை வெட்டிப் பிரிக்கும் சத்திரசிகிச்சையின் முதற்கட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதாக அமெரிக்க மருத்துவர்கள் தெரிவித்தனர்.



ஒட்டிப்பிறந்த எகிப்திய இரட்டையர்கள்

எகிப்தைச் சேர்ந்த மொஹமட் மற்றும் அஹமட் ஆகிய இரு குழந்தைகளும் தலைகள் ஒட்டியபடி பிறந்தன. இப்போது இருவயதாகும் இக்குழந்தைகளை வெட்டிப் பிரிக்கும் சத்திரசிகிச்சை அமெரிக்காவின் டல்லாஸ் சிறுவர் மருத்துவமையத்தில் உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் காலை 7மணிக்கு ஆரம்பமானது. இது நேற்றும் தொடர்ந்தது. நேற்று சிகிச்சை வெற்றிகரமாகத் தொடர்ந்ததாக மருத்துவமையப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தச் சத்திரசிகிச்சைக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட படுக்கையில் சத்திர சிகிச்சைக்கு ஏற்றவகையில் படுக்கவைப்பதற்கு நேற்றுமுன்தினம் காலை முதல் மருத்துவர்கள் அதிகநேரம் செலவழித்தனர். பின்னர் குழந்தைகளின் தொடைகளில் இருந்து தசைச் சவ்வுகள் பிரித்தெடுக்கப்பட்டன. சத்திர சிகிச்சையின் போது மூளை மற்றும் எலும்புப் பகுதியை மூடுவதற்கு இவை பயன்படுத்தப்படும்.

இதன் பின்னர் குழந்தைகளின் தலைகளை இணைத்துள்ள குருதிக்குழாய்களை பிரிக்கும் சிக்கலான பணியை மருத்துவர்கள் ஆரம்பித்தனர். சத்திரசிகிச்சை தொடர்ந்து வெற்றிகரமாகத் தொடர்வதாக நேற்று அதிகாலை மருத்துவ மையப் பேச்சாளர் தெரிவித்தார். (ஒ)

### 'போபர்ஸ்' ஊழல் வழக்கிலிருந்து

# சோனியாவின் உறவினரை காப்பாற்ற இத்தாலி முயற்சி

புதுடில்லி,ஒக்.13

இந்திய இராணுவத்துக்கு 'போபர்ஸ்' பீரங்கிகள் வாங்கியதில் நடந்த ஊழலில் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இத்தாலிய வர்த்தகர் குவாத்ரோச்சியைக கண்டுபிடிக்குமாறு சர்வதேச பொலீஸாருக்கு அனுப்பிய கோரிக்கையைத் திரும்பப் பெறுமாறு இந்திய அரசை இத்தாலி அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மலேசியாவுக்கு தப்பி ஓடிய குவாத்ரோச்சி, கடந்த ஆண்டு டிசெம்பரில் தலைமறைவாகிவிட்டார். அவர் எங்கு இருக்கிறார் என்று தெரியாததால், அவரைக் கண்டுபிடிக்க சர்வதேச பொலீஸாரின் உதவியை சிபிஐ நாடியுள்ளது.

இதனிடையே இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி, சில வாரங்களில் இந்தியாவுக்கு வர இருக்கிறார். அவரது பயண ஏற்பாடுகள் பற்றி இந்திய அரசுடன் பேசிய இத்தாலிய அதிகாரிகள், குவாத்ரோச்சியைப் பிடிக்க சர்வதேசப் பொலீஸுக்குவிடுத்த வேண்டுகோளைத் திரும்பப் பெறுமாறு கேட்டுள்ளனர்.

இத்தாலியின் கோரிக்கை இந்திய அரசை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. குவாத்ரோச்சி எங்கு இருக்கிறார் என்றுகூற இத்தாலி மறுக்கிறது.

குவாத்ரோச்சி மலேசியாவில் பதுங்கியிருந்தபோது, அவரை இந்தியாவுக்கு நாடு கடத்துமாறு அந்நாட்டு அரசை சிபிஐ கேட்டுக்கொண்டது. அப்போதும் மலேசியப் பிரதமர் மஹாதிரிடம், இத்தாலியப் பிரதமர் பேசியிருக்கிறார். இதை மஹாதிர் வெளிப்படையாகக் கூறினார்.

# தென்கொரிய அமைச்சர்கள் கூண்டோடு இராஜினாமா!

### ஆனால் ஜனாதிபதியால் நிராகரிப்பு

ஊழல் முறையீடுகள் அதிகரித்து வருவதால் தென்கொரிய அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் கூண்டோடு இராஜினாமாக் கடிதம் கொடுத்தனர்.

ஆனால், அமைச்சர்களின் இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி ரோரிஹியூன் நிராகரித்துவிட்டார்.

ஜனாதிபதி மீதும் அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் மீதும் அங்கு ஊழல் முறையீடுகள் அதிகரித்து வருகின்றன. அங்கு லஞ்சம் பெறுவது சாதாரணமாகிவிட்டது என்று பல அமைப்புக்கள் கண்டனங்களும் தெரிவித்திருக்கின்றன.

இந்நிலையில் பிரதமர் கோகுன் மற்றும் அமைச்சர்கள் இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கொடுத்தனர்.

முறையீடுகள் அதிகரித்து வரும் நிலையில் தொடர்ந்து பதவியில் நீடிப்பது தார்மீக அடிப்படையில் சரியானது போன்று தென்படவில்லை என்று இராஜினாமாக் கடிதத்தில் அமைச்சர்கள் குறிப்பிட்டிருந்தனர். அத்துடன் ஜனாதிபதியும் இராஜினாமாச் செய்யுமாறு அதில் கோரப்பட்டிருந்தது.

ஆனால், அமைச்சர்களின் இராஜினாமாக் கடிதத்தை நிராகரித்த ஜனாதிபதி தானும் இராஜினாமா செய்ய மாட்டேன் என்று அறிவித்திருக்கிறார்.

அமைச்சர்களின் இராஜினாமாவை ஜனாதிபதி நிராகரித்திருப்பதால் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் உடனடியாக பணிக்குத் திரும்புவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## உலக அரங்கில்

### பாப்பரசர் ஆசி

வாடிகன்சிட்டி,ஒக்.13

இத்தாலி நாட்டிலிருந்து வந்திருந்த யாத்ரீகர்களுக்கு, சனிக்கிழமை பாப்பரசர் ஆசி வழங்கினார். மேலும், கிழக்கு தைமூர் அதிபர் ஸனானா கஸ்வோவுடன் தனிப்பட்ட முறையில் 15 நிமிடம் அவர் ஆலோசனை நடத்தினார்.

பாப்பரசருக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்று இத்தாலி பத்திரிகை வெளியிட்ட செய்தியை வாடிகன் செய்தித் தொடர்பாளர் மறுத்தார்.

# நைஜீரியாவில் கப்பல் விபத்து: நூறு பேர் நீரில் மூழ்கிச் சாவு!

நைஜீரியாவில் கப்பலொன்று விபத்தில் சிக்கியதால் நூறு பேர் வரை பலி யாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பாலமொன்றுடன் மோதியதால் கப்பல் மூழ்கியது என்று மீட்கப்பட்ட பயணிகள் கூறியிருக்கின்றனர். கப்பலில் 150 பேர் வரை பயணித்துள்ளனர். இவர்களில் 50 பேர் மீட்கப்பட்டுள்ளனர். ஏனையோரைத் தேடும் பணி நடைபெறுகின்றது.

கிழக்கு நைஜீரியாவில் அபுஜா நகரில் இருந்து 700 கி.மீ. தூரத்தில் உள்ள பெனு ஆற்றிலேயே இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது.

எண்ணெய், சிமெந்து ஆகியவற்றுடன் பயணிகளையும் ஏற்றிவந்த இக்கப்பல், ஆற்றின் மேலாக இருந்த பாலத்தின் தூணுடன் மோதியதால் இந்த விபத்து நடந்ததாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

மூழ்கிய கப்பலிற்குள் செல்ல முடியவில்லை என்று மீட்புப் பணியாளர்கள் கைவிரித்துவிட்டனர்.

இதனால், கப்பலுக்குள் சிக்கியிருக்கும் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கப்பலில் எத்தனை பேர் பயணித்தனர் என்ற சரியான விவரம் தெரியவரவில்லை.

# 175 மண் புழுக்களை உயிருடன் விழுங்கி முன்னைய கின்னஸ் சாதனை முறியடிப்பு!

175 மண்புழுக்களை உயிருடன் விழுங்கி முன்னைய கின்னஸ் சாதனையை முறியடித்திருக்கிறார் தமிழக வாலிபர் ஒருவர். கடந்த வருடம் அமெரிக்காவைச் சேர்ந் மார்க் ஹூங் என்பவர் 94 வினாடிகளில் 110 மண்புழுக்களை விழுங்கி கின்னஸ் சாதனை படைத்திருந்தார். இந்தச் சாதனையை முறியடித்துள்ள தமிழக வாலிபர், 30 வினாடிகளில் 175 மண்புழுக்களை விழுங்கி புதிய சாதனை படைத்திருக்கிறார்.

ம[illegible]ன் (வயது 25) என்ற இவர், சில [illegible]ளுக்கு முன் பாம்புகளை [illegible]யும், பாம்பை மூக்கு வழியாக [illegible] வாய் வழியாக எடுத்தும் சாதனை படைத்திருந்தார். அதனால், இவர் 'சினேக் மனோ' என்று அழைக்கப்பட்டார்.

அமெரிக்கரின் கின்னஸ் சாதனையை முறியடிக்கப் போவதாக அறிவித்த மனோகர், அதற்கான ஏற்பாடுகளை கடந்தவாரம் முதல் ஆரம்பித்தார். அதன்படி நேற்றுமுன்தினம் அமெரிக்கரின் கின்னஸ் சாதனையை முறியடித்த மனோகர், புதிய சாதனையையும் படைத்தார்.

சுமார் நான்கு அங்குலம் முதல் ஏழு அங்குலம் வரையான 200 மண் புழுக்கள் சுத்தம் செய்யப்பட்டு தட்டு ஒன்றில் வைக்கப்பட்டன. உயிருடன் இருந்த இந்த மண்புழுக்களை நூடில்ஸ் சாப்பிடுவது போல் வாயில் போட்டுமென்று விழுங்கிச் சாதனை படைத்தார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள்



யாழ். புண்ணிய பூமிக்கு வருகை
ஸ்ரீசோட்டாணிக்கரை பகவதி அருள்பெற்ற
ஸ்ரீவெட்டுடைய காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்

**மணிசாமி சாமி**

கைரேகை, ஜாதகம், எண்கனிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும், திருமணத் தடங்கலா? காதலில் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வித்தடையா? கடன் தொல்லையா? தொழிலில் முன்னேற்றமில்லையா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா? குழந்தைப் பாக்கியமில்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள். உண்மை புரியும்.

**மணிசாமி சாமி**
54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,
பழைய லிங்கம் கூல்பார் அருகில், உல்லாசப்பயணிகள் விடுதி, யாழ்ப்பாணம்.

(23550) (24-11-18)


# கேள்வி அறிவித்தல்

1. முல்லைத்தீவு நகர தாழ் மின்னழுத்த மின்சார விநியோகத்திற்காக இரண்டு எண்ணிக்கையுடைய 100 கே.வி.ஏ/3 அவத்தை / 440 வோல்ற்று / 50 அதிர்வுகள் கொண்ட டீசல் எரிபொருளினால் இயங்கக்கூடிய மின்பிறப்பாக்கிகளுக்கான கேள்விகள், உற்பத்தியாளர்கள் / விநியோகத்தர்கள் / ஏற்றுக்கொள்ளப்பட்ட முகவர்கள் ஆகியோரிடமிருந்து கோரப்படுகின்றது. மேற்குறித்த சேவைக்கு கேள்வி மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 24,000/- உம் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 750/- உம் செலுத்தி, கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவுக் கச்சேரியிலுள்ள புனர்வாழ்வுக் கிளையில் 23.10.2003 காலை 10.00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்.
2. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 31.10.2003 அன்று முற்பகல் 10.00 மணிக்கு முன் பதிவுத்தபாலில் கிடைக்கக் கூடியதாகவோ அன்றி முல்லைத்தீவுக் கச்சேரியில் அதற்கென ஒதுக்கப்பட்ட பெட்டியிலோ இடலாம். கேள்விப்பத்திர வலது பக்க மேல்மூலையில் "100 கே.வி.ஏ. மின்பிறப்பாக்கிகள் இரண்டிற்கான வழங்கல்கள்" எனக் குறிப்பிடல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் 31.10.2003 அன்றைய தினமே பிற்பகல் 3.00 மணியளவில் திறக்கப்படும். இக் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகோரியோர்களோ அல்லது அவரினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
4. முன்னர் இக்கேள்வி அறிவித்தலுக்கு, விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் தற்போதைய கேள்விக்கான விண்ணப்பங்களை எதுவித கட்டணங்களுமின்றி அனுப்பலாம்.

**திருமதி இமல்டா சுகுமார்**
*(தலைவர் கேள்விச் சபை)*
**அரசாங்க அதிபர்,**
**முல்லைத்தீவு மாவட்டம்.** (சி-30643) (25-24-11-18)

# பணிநிலை வெற்றிடம்

"மௌவல் குழுமம்" (தனியார்) வரையறுக்கப்பட்ட [MOUVAL GROUP (PVT) LTD] நிறுவனத்தினால் கீழ்க்காட்டப்படும் பணி நிலைகளிற்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை: **இயந்திரவியல் முகாரி** (MECHANICAL FOREMAN)
தகைமை: **அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில்இயந்திரவியல்** (MOTOR MECHANISM)
கற்கை நெறியைக் கற்றுத் தேர்ச்சியடைந்திருக்கவேண்டும்.
பட்டறிவு: **03 ஆண்டுகள் இயந்திரவியல் முகாரி** (MECHANICAL FOREMAN)
பட்டறிவு உட்பட 10 ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவினை இயந்திரவியல் (MECHANISM) துறையில் பெற்றிருக்கவேண்டும்.
அகவை: **50 ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.**
சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

2. பணிநிலை: **உற்பத்தி முகாமையாளர்**
தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தொழில் நிர்வாகமாணி முகாமைத்துவம் கற்கை நெறியை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
பட்டறிவு: 03 ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவினை உற்பத்தித் துறையில் பெற்றிருக்கவேண்டும்.
அகவை: **35 ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.**
சம்பளம்: **நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

வேண்டுகையர்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட தன்விளக்கத் (சுயவிவரம்)துடனும், தேவையான சான்றிதழ்களுடனும், இரண்டு (02) நற்சான்றிதழ்களுடனும் வரும் 2003 ஒக்ரோபர் 25 ஆம்நாள் பணிநிலை 01 இற்கு உரியவர்கள் காலை 10.00 மணிக்கும், பணிநிலை 02 இற்கு உரியவர்கள் மதியம் 2.00 மணிக்கும், **கந்தசாமி கோவிலடி, யாழ்சாலை, கிளிநொச்சி** இல் அமைந்திருக்கும் "மௌவல் குழுமம்" (தனியார்) வரையறுக்கப்பட்ட [MOUVAL GROUP (PVT) LTD] நிறுவனத்திற்கு நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**முகாமைப் பணிப்பாளர்,**
**மௌவல் குழுமம்**
**(தனியார்) வரையறுக்கப்பட்டது,**
**கிளிநொச்சி.** (23541) (25-24-11-18)

# செய்திக் கொத்து

## சுற்றாடல் அபிவிருத்தி குழுக்கள் நிறுவப்படும்

வலி.வடக்கு,ஒக்.13

குடாநாட்டில் கிராம அலுவலர் மட்டத்தில் சுற்றாடல் அபிவிருத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பிற்கமைய இக்குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.(எ-10-86)

## சாவகச்சேரி இந்துவில் புதிய மாடிக்கட்டடம்

தென்மராட்சி,ஒக்.13

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பொது நூல் நிலையத்திற்கு மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் அண்மையில் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சந்திரசேகராவினால் நடப்பட்டது. இக்கட்டடம் அமைப்பதற்கான நிதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. (எ-117)

## சத்துணவு வழங்கல்

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் சரசாலையில் உள்ள மூன்று முன்பள்ளிகளுக்கு போஷாக்குத் திட்டத்தின் கீழ் சத்துணவுகளை வழங்கியுள்ளது.

கழக உறுப்பினர்களால் இவை முன்பள்ளி ஆசிரியர்களிடம் கையளிக்கப்பட்டன. (எ-10-117)

## மருத்துவப் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஒக்.13

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி தொடக்கம் 3ஆம் திகதி வரையும் வண்ணார்பண்ணைப் பகுதியில் யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் இலவச மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இதில் 189 முதியவர்கள் இரத்தப்பரிசோதனை மற்றும் சலப் பரிசோதனை ஆகியவற்றுக்கு உட்படுத்தப்பட்டனர். (எ-10)

## வீதிகள் புனரமைப்பு

ஊர்காவற்றுறை,ஒக்.13

ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இப்புனரமைப்புப் பணியில் ஈடுபடுவோருக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10-16)

## ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கவில்லை என புகார்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று உள்ளூராட்சி சபைகளில் பயிலுநராக இணைக்கப்பட்டவர்களுக்கு 7 மாதம் முடிந்த நிலையிலும் இதுவரை ஊக்குவிப்புப் படி வழங்கப்படவில்லை எனக்கூறப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மேற்படி பயிற்சிக்காக நாளொன்றுக்கு 75 ரூபா வீதம் வழங்குமாறு பணித்துள்ள நிலையிலும், குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் கொடுப்பனவை இதுவரை வழங்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-185)

## கட்டடப் பொருள் விநியோகம்

தென்மராட்சி,ஒக்.13

இந்து கலாசார அமைச்சினால் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்படவுள்ள 20 வீடுகளுக்கான கட்டடப்பொருள்கள் உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் பின்தங்கிய பகுதிகளாக இனம் காணப்பட்ட கொடிகாமம் மற்றும் மட்டுவில் பகுதிகளில் இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (எ-10-117)

## செயற்பாட்டு அறை விரைவில் அமையும்

சண்டிலிப்பாய்,ஒக்.13

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் ஓடியோ மற்றும் வீடியோ செயற்பாட்டு அறை ஒன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதன் மூலம் மாணவர்களுக்கு ஓடியோ, வீடியோ தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார். (எ-10-135)

## தலையில் படுகாயம்

வீதியில் நிறுத்திவைத்திருந்த தனது சைக்கிளைத் தட்டி விழுத்தியவரை சைக்கிள் உரிமையாளர் இரும்புக் கம்பியினால் தாக்கியதில் அவர் தலையில் படுகாயமடைந்தார்.

[illegible] யில் நடைபெற்ற இச்சம்பவத்தில் நவாலி தெற்கைச் சேர்ந்த க.சிறீபதிகரன் (வயது -24) என்பவரே படுகாயமடைந்தவராவார். (எ-10-6)

# பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டெட்

## சம்பளம் வழங்கல்

பரந்தன் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் 18.10.2003 சனிக்கிழமை தொடக்கம் 20.10.2003 திங்கட்கிழமை வரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும்.

கா.சிவபாதசுந்தரம்
(தொழில் முகாமையாளர்).

(23543) (26-24-11-18)


## வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்

## மலிவு விற்பனை

**மாபெரும் சிறப்புத் தள்ளுபடி**

சகல விதமான புடைவைகள் மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்**
(176) 258, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

(23471) (24-11-18)


## இலவச கணனிப் புலமைப்பரிசில்

We Serve

**நல்லூர் லயன்ஸ் கழகம் I.I.S. கணனி நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் டிப்ளோமா பயிற்சி நெறிகள்.**

ஒரே தடவையில் இரண்டு டிப்ளோமா சான்றுகளைப் பெறும் வாய்ப்பு I.I.S. நிறுவனத்தினால் நடத்தப்படும் பொது உளச் சார்புப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளுக்கு அமைய நேர்காணல் மூலம் புலமைப்பரிசில் வழங்கப்படும். மாணவர்களின் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**விவரங்களுடன் விண்ணப்பப்படிவங்களை**
லயன் இ. ஜனக்குமார்,
அசோகா நகை அகம்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணத்தில் பெற்று
**30-10-2003 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.**

லயன். **இ.இராஜகுலேந்திரன்,** தலைவர்.
லயன். **இ.ஜனக்குமார்** செயலாளர்.

(C/30666) (26-24-11-18)

# அறிவித்தல்

ஊரிக்காடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குமரகுரு வசந்தாதேவி, சபாரட்ணம் செல்வேந்திரா, சபாரட்ணம் தெய்வேந்திரா, அழகேந்திரன் இரத்தினாதேவி, சபாரட்ணம் மகேந்திரா ஆகியோருக்குச் சொந்தமான யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று, உடுப்பிட்டி இறையில் அமைந்துள்ள "சீராவலைக் கலட்டி நிர 15 குளி 419/32 கொண்ட ஆதனம், மேற்குறித்த ஐந்து பேர்களுக்கு மட்டுமே அவர்களது தந்தையார் காலஞ்சென்ற செல்லத்துரை சபாரத்தினத்திற்குப் பின்பு பூரண சொந்தமானது. அதனால் குறித்த ஆதனத்தையோ அதன் ஒரு பகுதியையோ வேறு நபர்களிடம் வாங்குவதற்கோ அல்லது அதற்கான உடன்படிக்கை செய்வதற்கோ எவரும் முற்பட வேண்டாம் என இதனால் அறிவித்தல் தரப்படுகிறது.

**சுப்பிரமணியம் குமரகுரு**
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(23589) (24-11-18)

## இதயத்தின் நீங்கா ஓராண்டு நினைவலைகள்

*மண்ணின் மைந்தனாய்* 06 - 03 - 1943



*விண்ணின் நாயகனாய்* 24 - 09 - 2002

எங்கள் ஒளி விளக்கு
**அமரர் வைத்திலிங்கம் கதிரவேலு**
திதி: திருதியை

*ஓராண்டு சென்றதப்பா ஈரவிழிகள் காயவில்லை*
*நாமிங்கு வாடுகின்றோம் எந்தையரே எங்கு சென்றீர்?*
*யாருமறியாது காரிருளிலே காலனவன் அழைத்தானோ?*
*ஓராண்டென்ன எத்தனை ஆண்டானாலும் மறப்போமா எம் தெய்வத்தை.*
*ஓம் சாந்தி!*

*கரந்தன்,*
*நீர்வேலி.*

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்.

(24-11-18) (23588)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# முறுகல் நிலைமையை மோசமாக்கும் போக்கு!

யாழ்ப்பாணம், கண்டி வீதியில் நகருக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் மாலை நிகழ்ந்த விபத்துச் சம்பவத்தை அடுத்து அங்கு பெரும் களேபரம் இடம்பெற்றிருக்கின்றது.

விபத்துச் சம்பவம் இடம்பெற்று குறுகிய நேரத்துக்குள் கலகம் அடக்கும் பொலீஸாரும், இராணுவத்தினரும் முழுத் தயார் நிலையில் அங்கு குவிக்கப்பட்ட விதமும், அவர்கள் பொதுமக்களுடன் மிலேச்சத்தனமான முறையில் நடந்துகொண்ட முறையும் மக்கள் மத்தியில் விசனத்தையும், பல்வேறு சந்தேகங்களையும் உருவாக்கியிருக்கின்றன.

அண்மைக் காலத்தில் யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் வாகனங்கள் பொதுமக்களையும், பொதுமக்களின் வாகனங்களையும் மோதி விபத்துக்குள்ளாக்கிய சம்பவங்கள் அதிகரித்து வந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த பத்து நாள்களில் இத்தகைய சம்பவங்களின் பின்னர் பத்திரிகையாளர்கள் உட்படப் பொதுமக்கள் மோசமான முறையில் தாக்கப்பட்டிருப்பது இது மூன்றாவது தடவையாகும்.

பத்து நாள்களுக்குள் யாழ்ப்பாணத்தில் மட்டும் மடத்தடிச் சந்தி, நாவாந்துறை மற்றும் கச்சாய், நெல்லியடி, மாம்பழம் சந்தி என்று பல இடங்களில் படையினர் சம்பந்தப்பட்ட விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

யுத்த காலத்தில் - தாக்குதல் நடக்கலாம் என்ற அச்சத்தில் அல்லது யுத்த அபாயம் காரணமாக படையினரின் வாகனங்கள் கண்மண் தெரியாத வேகத்தில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் ஓடித்திரிந்ததையும் அதனால் பொது மக்களைப் பாதிக்கும் பல விபத்துச் சம்பவங்கள் ஏற்பட்டதையும் மக்கள் அவதானித்து - அனுபவித்து - வந்திருக்கின்றார்கள். ஆனால், யுத்த நிறுத்த காலத்திலும் - அமைதி வேளையிலும் - இது தொடர்கதையாகத் தொடர்வதைத்தான் மக்களால் சகிக்கமுடியாதிருக்கின்றது.

அமைதி வேளையில் சீருடை தரித்திருப்போரின் அசட்டையால் - அல்லது வேண்டுமென்றே அவர்கள் புரியும் 'தடிப்பு'த்தனத்தால் - அப்பாவிகள் மோசமாகப் பாதிப்படைகின்றார்கள் என்றும், இத்தகைய குற்றம் புரிவோர் சீருடை கவசத்தின் மூலம் சட்டத்திலிருந்தும் தண்டனையிலிருந்தும் தப்பிவிடுகின்றார்கள் என்றும் பொதுமக்கள் மத்தியில் பொதுவான கருத்து உண்டு என்பது உண்மையே.

எனவே, இத்தகைய 'அராஜகங்களுக்கு' எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் குற்றவாளிகளாக காணப்படுவோர், சட்டத்தினால் தண்டிக்கப்படவேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்ப்பதும் நியாயமானதே.

அத்தகைய நியாயம் அவர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துவதும், அதை பேச்சளவில் விடுத்து செயலளவில் வெளிப்படுத்தி மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதும் சட்டத்தினதும் சட்டத்தை நடைமுறைப் படுத்துவோரினதும் கடமையாகும்.

அத்தகைய நம்பிக்கை நிலையை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, மக்களை மேலும் மேலும் சீற்றமுறவைக்கும் போக்கில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தாது என்பது திண்ணம்.

மாம்பழம் சந்தி விபத்தின் பின்னர் அப்பகுதியில் படையினர் நடந்துகொண்ட விதத்தை பார்க்கும்போது, இனிவரும் காலங்களில் பொதுமக்கள் ஒன்று திரண்டு தெரிவிக்கக்கூடிய பொது எதிர்ப்பை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து குடாநாட்டுப் படைத்தலைமை தீர்க்கமான முடிவு ஒன்றுக்கு வந்துவிட்டதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராக நீதி, நியாயம் வேண்டி ஆரம்பத்தில் மூன்று தசாப்த காலமாக அமைதி முறையில்தான் தமிழ்மக்கள் போராடினார்கள். ஆனால், அந்தப் போராட்டங்கள் அரசபடைகளின் அடக்குமுறைச் செயற்பாடுகள் மூலம் நசுக்கப்பட்டன. அந்தநேரத்தில் சீருடை தரித்தோர் நடந்துகொண்ட விதம், இப்போது கடந்த பத்து நாள்களாக படையினர் சம்பந்தப்பட்ட விபத்துகளுக்கு பொதுமக்கள் எதிர்ப்புக் காட்டும்போது சீருடை தரித்தோர் நடந்துகொள்ளும்முறையோடு அச்சொட்டாக ஒத்துப்போவதையும் அவதானிக்க முடிகின்றது.

இத்தகைய விபத்துக்களாலும் மற்றும் அவற்றின் பின்னரும் ஏற்படக்கூடிய - வெளிப்படக்கூடிய - மக்களின் நியாயமான எதிர்ப்பை, அதிருப்தியை தவிர்ப்பதற்கும் தணிப்பதற்கும் அமைதியை ஏற்படுத்துவதற்கும் ஆக்கபூர்வமான பல வழிகள் உள்ளன. மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய பல சட்டமுறைமைகள் உள்ளன. யாழ். நீதிமன்றம் கூட அதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால் அவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, தனது அடக்குமுறைப் பாணி மூலம் இத்தகைய விடயங்களைக் கையாண்டு, தங்கள் எதேச்சதிகாரத்தை வெற்றிகரமாக நிலைநாட்டலாம் என்று மூத்தபடை அதிகாரிகள் சிலர் கனவு காண்கின்றனர் போலும்.

இத்தகைய போக்கு அமைதி முயற்சிகளுக்கும், சமாதான நிலைமைக்கும் வேட்டு வைப்பதாகவே அமையும். அத்தோடு இத்தகைய செயற்பாடு, கடந்த சில தசாப்த கால சரித்திரம் தங்களுக்குக் கற்றுத்தந்த கசப்பான அனுபவ பாடத்தின் அர்த்தத்தை சில படை அதிகாரிகள் இன்னும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பதையும் காட்டுகின்றது.

# காலத்தின் பதிவு



தளராத முயற்சி....   படம்: தேவா

# உலர்உணவு நிவாரணத்தைத் தவிர எதுவித உதவிகளும் கிடைக்கவில்லை!

## சுன்னாகம் ரயில் நிலைய முகாமில் வசிப்போர் தெரிவிப்பு

தெல்லிப்பழை,ஒக்.13

சுன்னாகம் புகையிரத நிலைய இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்துவரும் 13 குடும்பங்கள் உலருணவு நிவாரணத்தைத் தவிர இதுவரை வேறு எவ்வித உதவிகளும் தமக்கு வழங்கப்படவில்லையென முறைப்பாடு செய்துள்ளன.

தையிட்டி, வசாவிளான் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து கடந்த 14வருடங்களாக மேற்படி முகாமில் தாம் வசித்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நிவாரண உதவிகள் கிடைக்கப்பெறாமை குறித்து மேற்படி முகாமில் வசிக்கும் பெண்ணொருவர் பின்வருமாறு கூறினார்.

கடந்த 14வருடங்களாக இந்த உடைந்த புகையிரத நிலையக் கட்டடத்தில் வசித்து வருகிறோம். இதுவரை ஒரு பிளாஸ்ரிக் பாய்கூட எமக்குக் கிடைக்கவில்லை.

1995ஆம் ஆண்டு யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து வடமராட்சிக்கு சென்ற நாம் பின்னர் மீண்டும் இங்கு வந்து மீளக்குடியமர்ந்த போது மீளக்குடியமர்ந்த அனைவருக்கும் வழங்கப்பட்ட ரூபா ஐயாயிரம் மட்டும் எமக்குக் கிடைத்தது. இதுதவிர வேறு எவ்வித கொடுப்பனவும் கிடைக்கவில்லை.

பல்வேறு, வெளிநாட்டு, உள்நாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் எம்மிடம் வந்து நலன் விசாரித்தனர். பல உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தனர். எனினும், இதுவரை எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை - என்றார்.

மேற்படி முகாமைச் சேர்ந்த மற்றொரு பெண் கூறுகையில்-

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் உதவித்திட்டத்தின் கீழ் எமது முகாமைச் சேர்ந்த ஐவருக்கு வீடுகள் அமைத்துத் தர எமது பகுதிக்கான கிராம அலுவலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனினும், சொந்தக் காணியை அல்லது எங்கள் வசிப்பிற்கு உறுதியளிக்கக்கூடிய காணியை அடையாளங்காட்டுமாறும் -

இவ்வாறு காணி அடையாளம் காட்டப்படுமிடத்து வீடு அமைத்துத் தருகின்றோம் என்று சம்பந்தப்பட்ட நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாமோ அன்றாடம் கூலிவேலை செய்து வாழ்க்கையை நடத்துகின்றோம். இந்த நிலையில், சொந்தக் காணியை எவ்வாறு எம்மால் கொள்வனவு செய்யமுடியும். நாம் வசிப்பதற்கான காணியை தற்காலிகமாகவேனும் வழங்குவதற்கு இங்கு எவரும் தயாராக இல்லை - என்றார்.

அதேவேளை, மேற்படி முகாமைச் சேர்ந்த பாடசாலை செல்லும் வயதினையுடைய பிள்ளைகள் பாடசாலை செல்லாது தொழிலுக்குச் சென்று விடுவதாக முகாமில் வசிக்கும் பலரும் கவலை தெரிவித்தனர். (எ-150)

# குடிதண்ணீர் வழங்கலை சீரமைக்க 68 கோடி ரூபா உடனடியாக தேவை

## நீர் வழங்கல் சபை அதிகாரிகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.13

குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் குடிதண்ணீர் விநியோகத்திட்டங்களைப் புனரமைக்கவும், அவசியமான பகுதிகளுக்கு புதிய குடிதண்ணீர் விநியோகத்திட்டங்களை ஆரம்பிக்கவும் உடனடியாக 68 கோடி 50 லட்சம் ரூபா தேவைப்படுவதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். அலுவலகம் சம்பந்தப்பட்டோருக்கு அறிவித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைமையக அதிகாரிகள் குழுவினரிடமே இந்த உடனடித் தேவை குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சபையின் மேலதிக பொதுமுகாமையாளர் எஸ்.கே.எச். பெரேரா, வடக்கு - கிழக்கு மாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் என்.எம்.எஸ்.காலிங்கன், சபையின் பிரதம பொறியியலாளர் ரி.விஜயதுங்க போன்றோர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து குடாநாட்டு நீர்விநியோகத்திட்டங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

குடாநாட்டில் 59 வீதமான மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கவில்லை. இங்குள்ள நீர்விநியோகத்திட்டங்கள் மக்களுக்கு போதுமானதாக இல்லை.

எனவே, மேற்படி திட்டங்களை புனரமைக்கவும், புதிய திட்டங்களை செயற்படுத்தி குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் சுத்தமான குடிதண்ணீர் கிடைக்கச் செய்யவும் 68 கோடி 50 லட்சம் ரூபா அவசரமாக தேவைப்படுகின்றது.

நீண்டகால நீர்விநியோகத் திட்டங்களுக்காக 5கோடியே 50 லட்சம் ரூபா தேவையாக உள்ளது என்றும் - அந்த அதிகாரிகள் குழுவிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இது குறித்து, தாம் கூடிய விரைவில் கவனம் செலுத்தவிருப்பதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-4)

### நாளை

புரட்டாதி 27
செவ்வாய்க்கிழமை
(14.10.2003)
திதி : சதுர்த்தி
முன்னிரவு 8.42 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
முற்பகல் 11.36வரை.
[illegible]: 10.32 - 12.02
[illegible]: 0[illegible].02-04.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எதிர்காலத்தை நீ விரும்[illegible]காலத்தில் ஒன்றும் மிச்சமில்லாமல் எல்லாவற்றையும் நீ தியாகம் செய்துவிடவேண்டும்.

# இலக்கியப் பரிசுக்கு தெரிவான நூல்கள்

கடந்த ஆண்டு வெளியான நூல்களில் இலக்கியப்பரிசு பெறும் நூல்களின் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இப்பட்டியலை வெளியிட்டுள்ளது.

பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களும் நூலாசிரியர்களும் வருமாறு:-

கவிதை:- "பருவப் பாலியர் படும்பாடு" (காவியம்) க.சச்சிதானந்தன்,
"பனிமழை" (மொழிபெயர்ப்பு) - அ.யேசுராசா,
மனிதத்தைத் தேடி (ஆக்கம்) செ.மகேஸ்
சிறுகதை:- 'நிலாக்காலம்' - ஆ.இரத்தினவேலோன்
நாவல்:- 'இனி வானம் வெளிச்சிடும்' - தமிழ்க்கனி
நாடகம்:- 'எங்கள் நாடு' - அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை
ஆய்வு:- 'நாவலர் வாழ்வும் வாக்கும்' - நா.சுப்பிரமணியம்
பல்துறை:- நிருத்தியம்! - திருமதி மீரா மங்களேஸ்வரன்,
'கருகும் பசுமை' - எஸ்.பேராசிரியன்.
உயர்கல்வி:- சித்தமருத்துவ மூலதத்துவம் - டாக்டர் சே.சிவசண்முகராஜா
சிறுவர் இலக்கியம்:- சிறுவர் சிந்தனைக் கதைகள் - அரு.வை.நாகராஜன். (ஒ)

# ஆளுநர் விருது பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டோர்

திருமலை,ஒக்.13

இநத ஆண்டுக்கான ஆளுநர் விருதுபெறுவோரின் பெயர்களை வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல் திணைக்களப் பணிப்பாளர் சி.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

விருதுகளுக்கான துறைகளும், அத்துறைகளில் விருது பெறுபவர்கள் பெயர்களும் வருமாறு:-

வில்லிசை - கே.என்.கணபதிப்பிள்ளை (சின்னமணி)
பொதுச்சேவை - செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
இலக்கியம், மொழிபெயர்ப்பு - ஏ.ஜே.கனகரட்ணம்
நாடகம், தவில் - கே.கணபதிப்பிள்ளை
சங்கீதம் - ராஜூ மாஸ்ரர்
கவிதை, சிறுகதை - சண்முகம் சிவலிங்கம்
கவிதை - எம்.பொன்னம்பலம்
படைப்பு இலக்கியம் - பளீல் ஏ.காரியப்பர்
ஆகியோரே ஆளுநர் விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES ON CONTRACT BASIS

எமது நிறுவனத்தில் பின்வரும் அலுவலர்களுக்கான பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1) TECHNICAL OFFICER - CIVIL ENGINEERING**

விண்ணப்பதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குடிசார் பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றவராய் அல்லது இறுதியாண்டு மாணவராக இருக்கவேண்டும். மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரத்தை கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

**2) ENGLISH TYPIST CUM COMPUTER PROGRAMMER**

விண்ணப்பதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில தட்டெழுத்துப் பயிற்சியை மேற்கொண்டு சான்றிதழைப் பெற்றவராயும் நன்கு தேர்ச்சியுள்ளவராயும் கணனியில் M.S. Office, M.S. Excel என்பவற்றை கையாளக்கூடியவராயும் இருக்க வேண்டும். போதிய ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

வயது எல்லை 35 வயதிற்கு கீழ்
வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.
விண்ணப்பங்கள் யாவும் தமது சுயவிவரக் கோவையுடன் இன்றிலிருந்து 10 நாள்களுக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(23564). (26-11-18-24)

**MANAGING PARTNERS**
**CHRISTY CONSTRUCTION**
(ENGINEERS & CONSTRUCTORS)
No.93, MAIN STREET
JAFFNA - SRI LANKA.


## தங்கநகை கண்டெடுப்பு

கோப்பாய்,ஒக்.13

கோப்பாய்ச் சந்திக்கும் - இராச வீதிச் சந்திக்குமிடையில் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது என்றும் -

உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டி நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-72)


## வைத்தியம்

செங்கண் மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

(24-11-18)

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459
(23552)



## CD மலிவு விற்பனை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு புதிய, பழைய பாடல்கள் அடங்கிய
ஓடியோ CD
வீடியோ CD } 50/= முதல் 90/= வரை.

அன்றை பராசக்தி முதல் இன்றைய கலாட்டா கணபதி வரையிலான சகல தமிழ்த் திரைப்பட CDகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
பழைய படம் 170/= (27-24-11-18)

**AASIAN** ELECTRONICS CENTRE
(23509) No. 11/4, Stanley Road, Jaffna. ☎ 0777 - 785549, 222 - 5446


## மனமுவந்து பாராட்டுகின்றோம்

எமது ஐயனார் விநியோக வாய்க்கால் விவசாய அமைப்பின்
ஆரம்ப காலத் தலைவரும், சிறந்த சமூக சேவையாளரும், தொண்டருமான

### திரு.ச.கிருஷ்ணபிள்ளை



அவர்கள்
சாவகச்சேரி நீதிமன்ற
நீதிவான் திரு. பா. சுப்பிரமணியம் முன்னிலையில்
03.10.2003இல் சமாதான நீதிவானாகச்
சத்தியப்பிரமாணம் எடுத்து பதவியேற்றமையிட்டு
அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்ட விநாயகர்
அருள்வேண்டி பல்லாண்டு வாழப்
பிரார்த்திக்கின்றோம்.

அக்கராயன்குளம். (23571)(27-24-11-18) நிர்வாக உறுப்பினர்கள், விவசாயிகள்.

## 45 ஆவது நாள் நினைவஞ்சலி



செல்வன்
### மகாதேவா தனரூபன்
(செல்வா)

அன்னைமடியில் அரும்பாக 29.01.1984
லொறியின் அழிப்பில் துரும்பாக 30.08.2003

பணவெறி பிடித்த மணல் லொறி ஒன்று
வீதியிலே வந்ததடா செல்வா!
மரக்கொப்புப் பெரிதென்று எண்ணி
உன் இன்னுயிரைப் பறித்துவிட்டார்கள்
கலங்கித் தவிக்கின்றோம் நாம் இன்று!

உன் நினைவில் வாடும்:
சு.தனபாலசிங்கம்
மாமா குடும்பத்தினர்.

இருபாலை.
(23437) (24-11-18)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலரும் மொட்டாக 1984 - 01 - 29



லொறி சாரதியின் அழிப்பில் 2003 - 08 - 30

### அமரர் மகாதேவா தனரூபன் (செல்வா)

திதி: 13.10.2003

பெற்ற வயிறு பற்றியெரியுதடா ~ செல்வா
உன் மழலை மொழியைக் கூட
கடைசியாகக் கேட்கவில்லையே பாவி நான்
தந்தை கதறியழ உன் சோதரர்கள்
உணர்விழந்து நிற்க ~ யமன்
லொறி தனில் வந்து ~ உன்
உயிரைப் பறித்தானே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது பாசத்தின் உறைவிடம் மகாதேவா தனரூபன் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (13.10.2003) திங்கட்கிழமை நண்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கலைவாணி வீதி,
கோண்டாவில். (23436) (24-11-18) தந்தை, தாய், சகோதரர்கள்.

## நினைவுச் சுடர்

மலர்வு 05 - 10 - 1934



மறைவு 13 - 10 - 1985

### அமரர் தம்பிப்பிள்ளை திருச்செல்வம்

(முன்னாள் கிராமசேவையாளர், ஐயா கடை - மீசாலை)

அன்பின் அகல் விளக்காய்
இன்பக் களஞ்சியமாய்
உள்ளன்போடு உணவூட்டி
எமக்காகவே வாழ
ஐயங்களைப் போக்கி
ஓங்கார முருகன்

ஆதரவின் உறைவிடமாய்
ஈகையின் பிறப்பிடமாய்
ஊக்கமுடன் உயர்வாக்கி
ஏகமனதுடன் முன்வந்து
ஒற்றுமையை நிலைநாட்டி
ஒளவைக்கருளியது போல

எம்மைக் காத்துவந்த தெய்வமே! தந்தையே!
உங்கள் சுயநலமற்ற அன்பைப் போல எம்மில் அன்பு
காட்ட இப்பூவுலகில் யாருமில்லை; எம்மைப் பிரிந்து
ஆண்டுகள் 18 கடந்தாலும் இன்றும் உங்களை
அன்று போல நேசிக்கின்றோம்.
உங்கள் ஆத்மசாந்திக்காக நாம் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம்,
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

(23520) (24-11-18)

உங்கள் பிரிவால் பாதிப்புற்ற:
[illegible]
[illegible]
பேரன், பேர்த்தி, மகன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 06 - 1924



மறைவு 24 - 09 - 2002

### அமரர் பொன்னம்பலம் துரைசிங்கம்

(முன்னாள் முகாமையாளர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி)

திதி: திருதியை (13.10.2003)

ஓராண்டு ஆனதையா ஒளி விளக்கு அணைந்து!
உம்மையே நினைத்து எம் உள்ளம் ஏங்குதையா!
உமையெண்ணித் தினந்தினம் தவிக்கின்றோமையா!
இம்மையில் எப்போதுமைக் காண்போமினி?
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவன் கோயிலடி,
மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி
(23554) (24-11-18)

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் வரும் வரையும்

## காத்திருக்கும் சந்திரிகா...

**ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தால் மட்டுமே அரசை வீழ்த்த முடியுமென ஸ்ரீ.ல.சு.கட்சிப் பிரமுகர்களே பகிரங்கமாகக் கருத்து வெளியிடும் நிலையில் அந்த கூட்டுக்குச் சாதகமான நிலையில் சந்திரிகா இல்லை. இது தாயின் வழியில் அதாவது தனது கட்சியின் தனித்தன்மையைப் பேணுவதாகவும் இருக்கக்கூடும். இதுகுறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. உப்புல் ஜோசெப் பெர்னாண்டோவால் எழுதப்பட்டு 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க கொலை செய்யப்பட்டு 44 ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. அவர் கொலையுண்டதை அடுத்து, இனிமேல் ஸ்ரீ.ல.சு. கட்சியால் தலையெடுக்கமுடியாதெனப் பலர் அபிப்பிராயப்பட்டனர். அதேவேளை - என்.எம்.பெரேரா, டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க மற்றும் பிலிப் குணவர்த்தனா ஆகிய இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் ஸ்ரீ.ல.சு.கட்சி உடைந்து பிளவுபடுவதைக் காணக் காத்திருந்தனர். ஆனால், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கவில்லை.

"என்.எம்.பெரேரா எனது கணவரைக் கொல்லாமல் கொன்றார்" எனக் கூறி மேடைக்கு மேடை ஏறிப் பிரலாபித்து அனுதாபம் பெற்றுக்கொண்டதன் மூலம் ஸ்ரீமாவோ ஸ்ரீ.ல.சு.கட்சியைக் கட்டிக்காத்துக் காப்பாற்றிவந்தார்.

அவ்வேளையில் - என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பிலிப் குணவர்த்தனா மற்றும் டாக்டர் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து தம்மிடையே உருவாக்க முயன்ற இடதுசாரி முன்னணிக் கூட்டு ஸ்ரீ.ல.சு.கட்சியின் எதிர்காலத்துக்குச் சவாலாய் அமையும் என்றதொரு அச்சம் நிலவியது. அதன் காரணமாக அக்கூட்டு முன்னணியில் பங்கேற்கவிருந்த கட்சித் தலைவர்களைச் ஸ்ரீமாவோ தனித்தனியாகச் சந்தித்துப் பேசியதன் விளைவாக அக்கூட்டு முன்னணி உருவாகி வளர்வதை முளையிலேயே கிள்ளிவிட முடிந்தது. அதன் தொடர்ச்சியாக ல.ச.ச.கட்சி, ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் இணைந்து கொண்டது. அதற்காக ல.ச.ச.கட்சி முன்வைத்த கோரிக்கைகள் யாவற்றையும் ஸ்ரீமாவோ நிறைவேற்றி விடவில்லை. 1964 ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோவின் அரசு நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டமையை அடுத்து அரசைக் கலைத்துவிடாது தொடர்ந்து நிர்வகிக்குமாறு ல.ச.ச.கட்சி வழங்கிய ஆலோசனையை ஸ்ரீமாவோ ஏற்க மறுத்துவிட்டார். அதேபோன்று 1965 இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பெரும்பான்மைப் பலம்பெறத்தவறிய நிலையிலும், பிரதமர் பதவியை விட்டு விலக வேண்டாமென வழங்கப்பட்ட ஆலோசனையையும் ஸ்ரீமாவோ ஏற்க மறுத்துவிட்டார்.

1970 ஆம் ஆண்டில் கூட்டு முன்னணி அரசு உருவாக்கப்பட்ட வேளையில் ல.ச.ச.கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சியினர் கோரிய அமைச்சர் பதவிகளை ஸ்ரீமாவோ அவர்களுக்கு வழங்கிவிடவில்லை. ஆயினும், அக்கூட்டு முன்னணியை விட்டு விலகிக்கொள்ள முடியாத சூழ்நிலையில் ஸ்ரீமாவோவினால் ஒதுக்கப்பட்ட அமைச்சர் பதவிகளையே ல.ச.ச.கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுச்செயற்பட நேரிட்டது. 1970 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில ல.ச.ச.கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து 25 நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தன. ஆயினும், அக்கூட்டு முன்னணி அரசில் அவர்களுக்குப் பெரும் அதிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை. அவ்வித குறிப்பிடத்தக்க அதிகாரம் எனச் சொல்லக்கூடிய வகையில் நிதியமைச்சர் பதவியை மட்டுமே அவர்களால் பெறமுடிந்தது. அவ்விதம் நிதிஅமைச்சு அவர்கள் வசம் வழங்கப்பட்டபோதிலும் அரசின் அடிப்படைக் கொள்கைத்திட்டங்கள் யாவும் ஸ்ரீமாவோ விரும்பிய வகையிலேயே தயாரிக்கப்பட்டன. அவ்வித அணுகுமுறை மூலம், அரசு மற்றும் கூட்டு முன்னணி ஆகிய இரு தரப்புக்களிலும் ல.ச.ச.கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் செல்வாக்கை நலிவுறச் செய்ததன் மூலம் 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தனித்துவத்தைக் கட்டிக்காத்துப் பாதுகாக்க ஸ்ரீமாவோவால் முடிந்தது.

இவ்வகையிலேயே, 1980 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோவின் குடியுரிமை அந்தஸ்துப் பறிக்கப்பட்ட சம்பவத்தால் ஸ்ரீ.ல.சு.கட்சியின் வரலாறு முடிவை நெருங்கிவிட்டதாகச் சகலரும் நம்பினர். அவ்விதம் அவரது குடியுரிமை அந்தஸ்து பறிக்கப்பட்ட பின்னர் 1982 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டிய தேவை கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்டது. ஆனால், ஸ்ரீமாவோ அதற்குச் சிறிதும் இடமளிக்கவில்லை. கம்யூனிஸ்ட்கட்சி, ல.ச.ச.கட்சி மற்றும் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் ஸ்ரீ.ல.சு.கட்சியினின்றும் விலகிச்சென்ற குழுவினரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு தனியான இடதுசாரிக் கூட்டணியொன்றினை உருவாக்கிக்கொண்டனர்.

அவ்வேளையில்கூட ஸ்ரீமாவோ ஸ்ரீ.ல.சு.கட்சியை கட்டிக்காத்து வந்தது மட்டுமன்றி, கட்சியை விட்டு விலகிச்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட்ட இடதுசாரிக் கட்சிகள தம்மை மீண்டும் நாடிவரும்வரை காத்திருந்தாரேயொழிய, தான் அவர்களின் பின்னால் செல்லமுயலவில்லை. இதற்குச் சில ஆண்டுகளின் பின்னர் மக்கள் ஐக்கிய முன்னணி மீண்டும் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் இணைந்து கொண்டது. அதற்குப் பின்னரே ஜே.வி.பியினர் ஸ்ரீமாவோவையும் ஸ்ரீ.ல.சு.கட்சியையும் பாதுகாக்க முன்வந்தனர். 1988 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்து 1972 ஆம் ஆண்டின் அரசமைப்பை மீண்டும் அறிமுகப்படுத்தும் நோக்கம் கொண்ட ஸ்ரீமாவோவின் கனவை நனவாக்கும் விதமாக ஒப்பந்தமொன்றினைச் செய்துகொள்ள ஜே.வி.பி. முன்வந்தது.

ஆனால், அது தொடர்பாக ஜே.வி.பி. விதித்த நிபந்தனைகளை ஏற்க மறுத்த ஸ்ரீமாவோ அதன்மூலம் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தனித்துவத்தைக்



கட்டிக்காத்தார். 1977ஆம் ஆண்டு முதல 1994ஆம் ஆண்டுவரை - 17 ஆண்டுகளாக ஸ்ரீ.ல.சு.கட்சி எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட காலத்தில் எவ்விதத்திலாவது ஐ.தே.கட்சி அரசைத் தோற்கடித்து புதிய அரசொன்றை உருவாக்கி பிரதமர் பதவி அல்லது ஜனாதிபதிப் பதவியை வகிக்கும் விருப்பத்தினுடனேயே ஸ்ரீமாவோ அரசியலில் ஈடுபட்டு வந்தார். ஆனால், அதற்காக அவர் தனது கட்சியை அடகு வைக்க விரும்பவில்லை. அவ்விதம் 1977ஆம் ஆண்டுமுதல் 1994ஆம் ஆண்டுவரை ஸ்ரீ.ல.சு.கட்சியைக் கட்டிக்காத்து வந்த அவர் தமக்கும் தனது கட்சிக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் உருவாகப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் மூலம் பொ.ஐ.முன்னணியை உருவாக்கினார்.

அவ்விதம் தாம் உருவாக்கிய பொ.ஐ.முன்னணி நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் இருந்ததொரு வேளையிலேயே ஸ்ரீமாவோ மரணமடைய நேர்ந்தது. ஸ்ரீமாவோவின் மரணத்தின் பின்னர் ஸ்ரீ.ல.சு.கட்சியின் கதி என்னவாகுமென கட்சியின் ஆதரவாளர்கள வினாவத்தலைப்பட்டனர். கட்சி அழிந்து விடுமென அவர்களால் சிந்தித்துப்பார்க்கக்கூட முடியவில்லை.

அதே ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைமைப் பொறுப்பை சந்திரிகா கையேற்றுக்கொண்டார். தமது தந்தையாரால் உருவாக்கப்பட்ட தனது தாயாரால் கட்டிக்காத்து வளர்க்கப்பட்ட ஸ்ரீ.ல.சு.கட்சியின் தனித்துவத்தை சந்திரிகா ஒருபோதும் அழித்துவிடப் போவதில்லை. இதனாலேயே ஜே.வி.பியினருடன் கூட்டுச் சேராது தனித்து நின்று ஸ்ரீ.ல.சு.கட்சியால் தேர்தலில் வெற்றிபெற முடியாதென ஸ்ரீ.ல.சு.கட்சி உறுப்பினர்களில் எவராவது பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டால் அவர்கள் கட்சியை விட்டு வெளியேற்றப்படுவரெனச் சந்திரிகா மிரட்டிவருகிறார்.

எவர் எவ்விதம் கூறியபோதிலும், கட்சியின் நலனையே கருத்தில் கொண்டு தூரநோக்குடன் சிந்தித்து, மிகுந்த அவதானத்துடன் முடிவுகள் மேற்கொண்ட ஸ்ரீமாவோவின் துணிச்சல் பற்றித் தெரிந்துகொண்டுள்ள எவரும் இன்று தாயைப்போலவே மகள் சந்திரிகாவும் செயற்படுவதாகக் கூறுகின்றனர்.

வேறு சிலரோ தாயைப்போலவே மகள் பிறந்திருப்பதாகக் கூறிக்கொள்கின்றனர். ஐ.தே.கட்சியிடம் தோல்வியுற்று பற்றிப்படர கொழுகொம்பற்ற நிலையில் துவண்டு நிலத்தில் வீழ்ந்திருந்த கொடியொன்று பற்றிப்படர ஆதரவு கொழுகொம்பு கிடைத்த வேளையில் தாயைப்போல துணிவுடன் மகளும் அதைப்பற்றிப்பிடித்து தலைநிமிர்ந்த காரணத்தால் அவ்வித கூற்று முற்றிலும் பொருத்தமானதே. கொடிக்குப் படர்வதற்கு ஓர் ஆதாரம் கிடைத்த வேளையில் அவ்வாதாரத்தை இறுகப்பற்றிப் பிடித்து தம் சக்தி அனைத்தையும் பிரயோகித்து தலைநிமிர முடிந்த காரணத்தால் அவ்வித கூற்று முற்றிலும் பொருந்துகிறது.

தாம் விரும்பிய விதத்தில் செயற்பட முடியாமல்போன காரணத்தால் இடதுசாரித்தலைவர்கள் மட்டுமன்றி, ஸ்ரீ.ல.சு.கட்சியினின்றும் பிரிந்து வெளியேறிச் சென்ற தரப்பினரும் மேடைக்கு மேடை ஒன்று சேர்ந்து 'இந்த நிலப்பிரபுவர்க்கத்தைச் சார்ந்த ஸ்ரீமாவோக்கு நாம் நிச்சயம் பாடம் ஒன்று கற்பித்தே ஆவோம்' எனச் சூளுரைக்கத் தலைப்பட்டனர். ஆனால் அவ்விதம் ஆவேசமாகப் பேசிய அனைவரும் பின்னர் ஒருசமயம் ஸ்ரீமாவோவின் இருகால்களிலும் வீழ்ந்து சரணாகதி அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இடதுசாரி அரசியல்வாதிகள் மட்டுமன்றி ஜே.வி.பியைச் சேர்ந்தவர்களும் ஐ.தே.கட்சி மீது தீவிர அரசியல் குரோதப்போக்குக் கொண்ட தரப்பினரும் ஸ்ரீமாவோவின் அரசியல் அதிகாரத்தனம் குறித்து கணித்திருந்தனர். அவருக்குச் சொந்தமான பெரும் நிலப்பரப்பின் உரிமையைப் பிரகடனப்படுத்தத் தவறிவிட்டதான குற்றச்சாட்டை முன்வைத்த இடதுசாரிக்கட்சிகள் ஒரு தடவை அரசியல் ரீதியில் அவரைக் கொலை செய்யவும் முயற்சித்தன. ஜே.வி.பியின் அவ்வித கொலை முயற்சியை மூன்று தடவைகள் மேற்கொண்டன. ஆனால் இவற்றின் காரணமாக ஸ்ரீமாவோவின் மதிப்பு அதிகரித்ததே அன்றி எவ்வகையிலும் குறைவடையவில்லை. ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு வெளியேயும் உள்ளேயும் இருந்து ஸ்ரீமாவோவை ஒழித்துவிட ஒரு சில சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியடைந்த நிலையில் அவரது கட்சித் தலைமைத்துவம் தொடர்பாக அவரது குடும்பத்துக்குள்ளேயே அபிப்பிராய பேதங்களை உருவாக்குவதில் அச்சக்திகள் வெற்றிபெற்றன.

"கட்சிக் கொள்கைகளில் காலத்திற்கேற்ற மாற்றங்கள் கொண்டுவந்து நவீன சிந்தனைகளுடன் செயற்பாட்டால் ஒழிய ஸ்ரீ.ல.சு.கட்சியால் மீண்டும் ஒருபோதும் தேர்தலில் வெற்றிபெற இயலாது" என ஒருதடவை ஸ்ரீமாவோவின் மகனான அனுரா கருத்து வெளியிட்டது மட்டுமன்றி, கட்சியை விட்டும் வெளியேறிச்சென்றார். பின்னர் சென்ற விதத்திலேயே மீண்டும் வந்து கட்சியில் இணைந்து கொண்டார்.

"இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டுச சேராது ஸ்ரீ.ல.சு.கட்சியால் தனித்து நின்று தேர்தலில் வெற்றியடைய முடியாது. இன்று ஐ.தே.கட்சியைத் தோற்கடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஸ்ரீ.ல.சு.கட்சி செயற்படவில்லை" எனக் கூறி சந்திரிகாவும் ஒருசமயம் ஸ்ரீ.ல.சு.கட்சியின்றும் வெளியேறினார். ஆனால் பின்னர் அனுராவைப் போன்றே அவரும் மீண்டும் திரும்பிவந்து இணைந்து கொண்டார்.

"நான் உயிருடன் இருக்கும்வரை ஸ்ரீமாவோவை பிரதமர் பதவியிலிருந்து அகற்றிவிட முடியாது" என முன்னாள் அமைச்சர் ரீ.பி.இலங்கரத்ன கூறியிருந்தார். அவர் ஸ்ரீமாவோவை பிரதமராக் [illegible] பினரும் இராஜதந்திர ரீதியில் தொடர்புகளைப் பேணிவந்த அரசியல் தலைவராவார். இவ்விதம் ஸ்ரீ.ல.சு.கட்சிக்காக விசுவாசமாக உழைத்த இலங்கரத்னவும் கடைசியில் ஐ.தே.கட்சியைத் தோற்கடிக்க முனையாது ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் தனது தலைமைத்துவத்தை பேணிக்காத்துக் கொள்வதிலேயே ஸ்ரீமாவோ கவனம் செலுத்துவதாக குற்றஞ்சாட்டி கட்சியை விட்டு வெளியேறிச் சென்றார். அவ்வேளையில் இடதுசாரிகளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்திக்கொண்டு ஸ்ரீமாவோவுக்குத் தான் பாடம் ஒன்று புகட்டப் போவதாக கூறிக்கொண்டே அவர் கட்சியிலிருந்து வெளியேறினார்.

ஆனால் அவர் எவ்வித பதவியையும் வகிக்காத நிலையில் - வெறும் சாதாரண இலங்கரத்னவாக மரணமடைய நேர்ந்த வேளையிலும், ஸ்ரீமாவோ ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவியாக பதவியிலிருந்தார்.

ஸ்ரீ.ல.சு.கட்சியை விட்டு விலகிச் செல்ல விரும்பிய எவரையும் ஸ்ரீமாவோ தடுக்கவில்லை. அவர்கள் அவ்விதம் கட்சியை விட்டு வெளியேறிச் சென்ற வேளைகளில் ஸ்ரீமாவோ அமைதியாக அவற்றை அவதானித்தவாறிருந்தார். ஸ்ரீ.ல.சு.கட்சியை விட்டு விலகிச் சென்று ஐ.தே.கட்சியில் இணைந்தும் அங்கு தமக்கு முக்கியத்துவம் பெறமுடியவில்லையே என்ற ஆதங்கத்துடன் மீண்டும் ஸ்ரீ.ல.சு.கட்சியிடமே வந்தவர்களையும் ஸ்ரீமாவோ மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். அவ்வேளையில் ஐ.தே.கட்சிக்கு எதிராக சரியான அரசியல் எதிர்ப்பை நிலைநிறுத்தக்கூடிய தகுதியும் திறமையும தன்னிடம் மட்டுமே உள்ளதாக அவர் நம்பியமையே அதற்கான காரணமாகும்.

இவைபற்றிச் சந்திரிகாவும் நன்றாகத் தெரிந்துகொண்டுள்ளார். ஜே.வி.பியினர் அண்மையில் கண்டியிலிருந்து அரச எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய சமயம் பண்டாரநாயக்க குடும்பத்தின் அதிகார கோட்டை எனக் கருதப்படும் நிட்டம்புவயிலும் அவர்கள் பிரமாண்டமான கூட்டமொன்றினை நடத்த ஒழுங்கு செய்வதாக தகவல் கிடைக்கப்பெற்ற வேளையிலும், சந்திரிகா தாயைப்போலவே பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. இன்றைய அரசியல் நிலைவரத்தின்படி தனது தலைமையில் முன்னெடுக்கப்படாத அரசுக்கு எதிரான எந்தவொரு எதிர்ப்பு நடவடிக்கையும் வெற்றியளிக்கப்போவதில்லை என்பதை சந்திரிகா தெரிந்து வைத்திருந்தமையாலேயே அவர் அக்கூட்டம் குறித்து எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை.

### வியெஸ்ரி

1960ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டுவரை ஐ.தே.க அரசுக்கெதிரான சகல நடவடிக்கைகளிலும் ஸ்ரீமாவோ பெரும் பங்கு வகித்தார். 1993ஆண்டு முதல் இன்றுவரை ஐ.தே.க அரசுக்கெதிரான சகல எதிர்ப்பு நடவடிக்கைகளும் சந்திரிகாவின் பங்களிப்புடனேயே இடம்பெற்றுள்ளன.

ஜே.வி.பியினரின் ஆதரவின்றி இவ்வித அரசுக்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட இயலாது. ஜே.வி.பியினரின் ஆதரவின்றி ஸ்ரீ.ல.சு.கட்சியால் தேர்தலில் வெற்றியடைய முடியாது என்றெல்லாம் கருத்து வெளியிடுவோர் விசுவாசமான எண்ணத்தில் ஐ.தே.கட்சி அரசுக்கெதிராக கருத்து வெளியிடுவோர் அல்ல. அவர்கள் வெறும் உதட்டளவில், பேச்சளவில் ஐ.தே.கட்சி அரசை எதிர்ப்போராக தம்மைக் காட்டிக்கொள்ள விளைபவர்களே. ஜே.வி.பியுடன் ஸ்ரீ.ல.சு. கட்சி கூட்டுச் சேர்ந்துகொண்டால் எல்லாம் சரியாகிவிடுமென எண்ணுபவர்களும் இவர்களேயாவர்.

அவ்வாறாயின் 2001ஆம் ஆண்டில் இடம்பெற்றது என்ன?

2001 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சி இணைந்த தகுதிகாண் அரசையே பொதுமக்கள் தோற்கடித்தார்களேயன்றி தனியாக ஜே.வி.பியின் அரசையல்ல. இந்த நிலையில் தற்போது ஜே.வி.பி மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சிகளுக்கிடையே கூட்டு உருவாக்கப்படவேண்டுமெனப் பொதுமக்கள் விரும்புவதாகக் கருத்து வெளியிடப்படுவது பொருத்தமாகத் தோன்றுகிறதா? இவ்விரு கட்சிகளுக்கிடையேயான இணைப்பு இந்நாட்டுப் பொதுமக்களுக்குப் புதியதொன்றல்ல. தகுதிகாண் அரசுமூலம் அது ஏற்கனவே பரிசீலித்துப் பார்க்கப்பட்ட விடயமல்லவா? தமது அவ் அனுபவத்தின் பலனாக 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பொதுமக்கள் அவ் அரசை ஒதுக்கி விட்டனரே!

இவை யாவற்றையும் சந்திரிகா நன்கறிவார். 2001ஆம் ஆண்டில் முஸ்லிம் காங்கிரஸ் சந்திரிகாவின் அரசிலிருந்து விலகிக்கொண்ட வேளையில சந்திரிகா ரணிலுடன் இணைந்து தேசிய அரசொன்றினை உருவாக்கியிருப்பாரானால், இன்று ரணில் வாய்திறந்து பேசுமளவிற்கு பொதுமக்களின் ஆதரவு அவருக்குக் கிட்டியிருக்காது. 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பொதுமக்கள் பொ.ஐ.முன்னணிக்கு வழங்கிய அதிகாரத்துக்கு கீழ்ப்பட்டே ரணில இன்றும் பிரதமர் பதவியில் நிலைத்திருக்க முடிந்திருக்கும் 2001ஆம் ஆண்டில் மீண்டுமொரு பொதுத்தேர்தல் இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. அதன்மூலம் சந்திரிகாவின் பொ.ஐ. முன்னணி தேர்தலில் தோல்வியைச் சந்திக்க வேண்டியிருக்காது. 1994ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற சகல பொதுத் தேர்தல்களிலும் வெற்றிபெற்ற பெருமை சந்திரிகாவுக்கும் பொ.ஐ.முன்னணிக்கும் கிட்டியிருக்கும்.

அதுமட்டுமன்றி, இன்று நாட்டில் சமாதானத்தை உருவாக்கிய பெருமை சந்திரிகாவைச் சென்றடைந்திருக்கும். அதுவுமன்றி ஒருவேளை சந்திரிகாவின் தலைமையிலான தேசிய அரசொன்றில் அங்கம் வகித்த காரணத்தால் உட்கட்சிப் பிளவுகள் உருவாகி ஐ.தே.கட்சி பல துண்டுகளாக் பிளவுபட்டிருக்கவும் நேர்ந்திருக்கும்.

சரி, அவ்விதம் சந்திரிகா ரணிலையும் இணங்க வைத்து தேசிய அரசொன்றினை உருவாக்க முடியாததொரு பின்னணியை உருவாக்கியவர்கள் யார்?

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பியும் இணைந்து உருவாகிய தகுதிகாண் அரசே அதற்கான பொறுப்பை ஏற்றாகவேண்டும். இத்தகுதிகாண் அரசு மீது பொதுமக்களுக்குத திருப்தியிருந்திருந்தால் 2001ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் ஐ.தே. முன்னணி வெற்றியடைந்திருக்க முடியாது. இத்தகுதிகாண் அரசின் ஆட்சி பொதுமக்களைத் திருப்திப்படுத்தவில்லை என்பதையே 2001ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் முடிவுகள் மூலம் பொதுமக்கள் உணர்த்தியுள்ளனர்.

அப்படியானால் இனிவரும் காலத்தில் இடம்பெறும் பொதுத்தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சி தனித்துப் போட்டியிட்டால் வெற்றிபெற இயலுமா? என்ற கேள்வியும் எழுகிறது.

எவ்வாறாயினும், ஸ்ரீ.ல.சு.கட்சியால் தேர்தலில் தனித்து போட்டியிடுவதன் மூலம் வெற்றிபெற இயலாது. எப்படியும் வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தே போட்டியிட்டாக வேண்டியுள்ளது. அவ்விதம் கூட்டொன்று உருவாக்கப்படுவதாயின் அது இடதுசாரி, வலதுசாரி, சிங்கள, பௌத்த, சிறுபான்மை இனக் கட்சிகள் மற்றும் சிற்சில உதிரிக் கட்சிகள் எனப் பல கடசிகளை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். அக்கூட்டில் கட்டாயத்தின் பேரிலாவது ல.ச.ச.கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவற்றுடன் வடபகுதி தமிழ் கட்சிகளும் உள்ளடக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். இன்று சந்திரிகா அவ்விதம் அமையத்தக்க கூட்டு முயற்சியொன்றினை உருவாக்கும் நோக்கிலேயே செயற்படுகின்றார். இப்பல கட்சிக் கூட்டின் மூலம் அதிகாரத்தை ஒன்றுதிரட்டி தமது பலத்தை வெளிப்படுத்துவதன் மூலம் ஜே.வி.பியையும் இக் கூட்டில் பங்கேற்கச்செய்யும் முயற்சியில் சந்திரிகா இறங்கியுள்ளார்.

சந்திரிகாவின் இம்முயற்சி கைகூட வேண்டுமானால், முதலில் அவர் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் தமது நிலையை ஸ்திரப்படுத்தியாக வேண்டியுள்ளது. அவ்வாறல்லாது, ஜே.வி.பியினர் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் சந்திரிகா கூட்டினை உருவாக்க முயல்வாரானால் அது அவருக்கும் கட்சிக்கும் நலிவு ஏற்படுத்த காரணமாவது மட்டுமன்றி, கட்சி பிளவுபடவும் வழிவகுக்கும்.

ஜே.வி.பியுடன் கூட்டு மேற்கொள்ளாது தேர்தலில் வெற்றிபெற முடியாது எனக் கருத்து வெளியிடுவோர் கட்சியின் தலைமைத்துவத்துக்கு எதிராகக் கட்சிலுள்ள ஏனையோரைத் தூண்டிவிடும் கைங்கரியத்திலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

(09ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பியாச்சோ டீசல் ஆட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: நிஷாம், 67/42, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (23594)

G.C.58ஐ தொடர் இலக்கமாகக் கொண்ட C50 மோட்டார் சைக்கிளும் 250-34ஐ தொடர் இலக்கமாகக் கொண்ட டொல்பின் வானும் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.கிருபாகரன், ஊரெழு மேற்கு, சுன்னாகம். T.P.: 071 2303659. (23562)

## Broiler விற்பனைக்கு

தரமான Broiler இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. ஒரு கிலோ 140/=. சுத்தம் செய்யப்பட்டது ஒரு கிலோ 230/=. தொடர்பு:- திரு. சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (23549)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரில் இருந்து நல்லூர், கந்தர்மடம், பிறவுண்றோட் வீதிக்கு இடையில் வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் வழங்கப்படும். தொடர்பு: விள.இல. 2071, மே/பா உதயன். (23596)

மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சகல வசதியும் கொண்ட ஓரளவு பெரிய வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில், தாவடி, மானிப்பாய், சுதுமலை போன்ற இடங்களை உள்ளடக்கியதாக இருத்தல் விரும்பத்தக்கது .தொடர்பு: விள. இல. 2070 மே/பா உதயன். (23575)

## ஆங்கில வகுப்பு

பட்டதாரி ஆசிரியரினால் கடந்த ஐந்துவருட கால பரீட்சை வினாத்தாள்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு: விள.இல.2069 மே/பா உதயன். (23561)

## வீடற்றவன் நாவல்

O/L மாணவர்களே! இந்த நாவலுக்கு விளக்கமும் விமர்சனமும் எழுதியிருக்கிறார். எல்லாவகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை விருப்பபாடமான தமிழ் இலக்கியத்திற்கு உரியது. ரூபா 25/=. (23547)

## தவறிவிட்டது

மிருசுவில் வடக்கு, மிருசுவிலைச் சேர்ந்த இராசன் உதயசேகரன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம், விசேட அ.அட்டை என்பன அடங்கிய பாக் (Bag) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (23570)

இணுவில் தியேட்டர் லேன், இணுவிலைச் சேர்ந்த மா.ஜெயசிங்கம் என்பவருடைய தே.அ. அட்டை (இல. 561221731V), வி.அ. அட்டை, மின்சார சபை அ.அட்டை என்பன வல்லிபுர ஆலய வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (23587)

## பரிசளிப்பு விழா

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் செல்வி பெ. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெயினா இருதயநாதன் கலந்துகொள்வார். கௌரவ விருந்தினராக டாக்டர் ஆர். விக்னேஸ்வரராஜாவும் விசேட விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியை திருமதி பி.சுந்தரமூர்த்தியும் கலந்துகொள்வர். (எ-135)

## விற்பனைக்கு

ஏழாலை மேற்கு, கேணியடியில் மில் வீதியில் உள்ள 41/2 பரப்பு காணியும் வீடும் உடன் விற்பனைக்குள்ளது.

தொடர்பு:
செ.உதயசூரியன்
அனுரா வீடியோ
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
T.P.: 0777 552540

(சி-30655) (24-11-18)

**வடமராட்சி, யாழ் - கொழும்பு பயணிகள் வான் சேவை**

நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவு செய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=
ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி, தொ.இ 021-226-3500
JEYA COMMUNICATION COLOMBO - 13
Tel. 01-2478444, 01-2478443, 0777-271478
லொறி மூலம் பொருட்களை அனுப்பலாம்.

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியுதவியுடன் நாவற்குழி தெற்கு ஸ்ரீ மகா விஷ்ணு சனசமூக நிலையத்தால் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-ரி)

## வீதி பலத்த சேதம்

வலி.தெற்கு,ஒக்.13

உடுவில் அம்பலவாணர் வீதியையும், உடுவில் டச் வீதியையும் இணைக்கும் நாவலடி வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாமையால் அவ்வீதியூடான போக்குவரத்தில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

நாவலடியில் அமைந்துள்ள ஆலயத்துக்கு வழிபடச்செல்பவர்களும், பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களும் இந்தப் பாதையை பயன்படுத்துவதில் சிரமம் அனுபவித்து வருகின்றனர். (எ-152)

## தேவை

* எழுதுவினைஞர்
* கணனி பயிலுநர்

நேரில் வருகை தரவும்.
14.10.2003 செவ்வாய்க்கிழமை
4.00 - 6.00 மணிவரை.
திகழ் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி, இணுவில்.
(23599) (24-11-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பிற்குரிய சக மாணவன்
செல்வன் ஜோர்ஜ் கெனடி அவர்களின் அன்புத் தந்தையார்

### சூசைப்பிள்ளை மார்க்கு

அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகவும் துயருறுகிறோம். அத்துடன் இவரது மறைவால் துயரில் மூழ்கியிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
H.N.D.A. 3 ஆம் வருட
பகல் நேர மாணவர்கள்.

(23601) (25-24-11-18)

## மரண அறிவித்தல்

### செல்லர் அரசலிங்கம்

(முன்னாள் ஊழியர், புகையிரத நிலையம்)

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் அரசலிங்கம் 12.10.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லி, செல்லர் இரத்தினம் அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதி - கண்மணியின் மருமகனும் தங்கமலரின் அன்புக் கணவரும் நவீனா (ஜேர்மனி), குகேந்திரன் (லண்டன்), நந்தினி, நிலாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சற்குணம், அமரதேவன் ஆகியோரின் மாமனாரும் அச்சுதன், ஜனார்த்தன் ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2003) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோழன் தோட்டம்,*
*கோண்டாவில் வடக்கு.*
(23600) (24-11-18)

தகவல்:
க.கிருபாகரன்.

## கண்ணீர் அஞ்சலி



*பரதக் கலை வித்தகர் – பாவேந்தர்*
*மஹாவித்துவான் ஞானசுரபி*
*பிரம்மஸ்ரீ* **ந.வீரமணி ஐயர்** *அவர்களின்*

மறைவு கலையுலகுக்கு மட்டுமன்றி சைவப் பேருலகுக்கே பெரும் இழப்பாகும்.

புலோலி பசுபதீஸ்வரர் மீது இருபத்தொரு அந்தாதிப் பாடல்கள் பாடி புகழ்பரப்பிய அன்னாரின் கமலப் பொற்பாதங்களில் எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

**புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானம்,**
*பருத்தித்துறை.*
(C/30675) (24-11-18)

- தர்மகர்த்தா சபையினர்,
தேவஸ்தான தொண்டர்கள்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா

*(A/L 97 மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)*

| மலர்வு: | உதிர்வு |
|---|---|
| 22.10.1978 | 13.10.1998 |

**காலமிட்ட கட்டளையை**
**கடந்து நீர் வாருமம்மா!**

*தங்க நிலாவே!*
*எங்கள் இல்லத் தாமரையே!*
*தரணியில் வந்துதித்த*
*எங்கள் தவப்பயனே!*

*ஐந்தாண்டு காலங்கள்*
*அவனியிலே உருண்டாலும்*
*ஆறிடுமோ எம் மனது*
*ஆசைமுகம் பாராமல்?*

*செய்தவங்கள் பொய்த்தம்மா!*
*தெய்வநீதி பிழைத்தம்மா!*
*காலமிட்ட கட்டளையைக்*
*கடந்து நீர் வாருமம்மா!*

*இல. 419, பிரதான வீதி,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.* (23595) (25-24-11-18)

நிதம் உன் பிரிவால் துயருறும்:
**பெற்றோர், சகோதரர்கள் மற்றும் உறவுகள்.**

## நெஞ்சை விட்டகலாத 12ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
1935 - 03 - 17



மறைவு
1991 - 10 - 13

### திருமதி ஞானம்மா இம்மானுவல்

அன்புடனும் பாசத்துடனும் எமை வளர்த்து
ஆளாக்கிய எம் அன்புத் தெய்வமே!
ஆயிரமாயிரம் உறவுகள் வந்தாலும் அவை
அன்னையின் அன்புக்கு ஈடாகுமோ?
கண்ணை இமைகாப்பது போல
காத்து வளர்த்தீர்கள் எமை நீங்கள்
ஆண்டுகள் ஈராறு சென்றாலும்
ஆறவில்லை நின் பிரிவுத்துயர்!

என்றும் நீங்காத நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும்
உறவினர்கள்.

க. நவரத்தினம்,
*11/7, சுவாமியார் வீதி,*
*கொழும்புத்துறை.* (23591) (26-24-11-18)

## நெஞ்சை விட்டு அகலாத நீங்காத நினைவுகளில்

**26ஆம் ஆண்டு**

*தோற்றம்* 20 - 08 - 1927



*மறைவு* 21 - 10 - 1977

விடாமுயற்சிக்கோர் வெற்றித் தந்தை
**அமரர் வினாசி பரமநாதன்**

**மூன்றாம் ஆண்டு**

*தோற்றம்* 30 - 06 - 1931



*மறைவு* 13 - 10 - 2000

வந்தனைக்குரியவள் எங்கள் தாய்
**திருமதி யோகம்மா பரமநாதன்**

"துயரத்தின் பிடியில் நாம்
துவண்டு நிற்கின்றோம்.
உங்களைப் பிரிந்த நாம்
வேதனையில் அழுகின்றோம்"

செல்விகள்: **ப.மைதினி** (இலிகிதர்),
மைதிலி (ஜேர்மனி).
*இல. 2?, ... வீதி,*
*நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.*
(23590) (26-24-11-19))

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் மாணவர் சமுதாயம் எதிர்கொள்ளப்போகும் சிக்கல்கள்

இன்றைய மாணவர்கள் எதிர்காலத்தில் சிறப்பான வாழ்க்கையைப் பெற்றுய்வதற்காக புதிய கல்விச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிக் குறைகூறுபவர்கள் கூட எதிர்காலத்திற்கு பொருத்தமான ஒரு கல்வித்திட்டம் நடைமுறையில் இருக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கின்றனர். எதிர்காலத்தில் எமது மாணவர்கள் எதிர்கொள்ளக்கூடிய சவால்களை நாம் இனம்கண்டுகொள்ளும் போதுதான் கல்விச் சீர்திருத்தத்தின் அவசியம் பற்றி அனைவராலும் உணர முடியும்.

### கற்க வேண்டிய கட்டாயம்

மனித வரலாற்றிலே வேடர் யுகம், இடையர் யுகம், விவசாய யுகம், பொறிகளின் யுகம், இயந்திரயுகம், கணனி யுகம்... என்ற காலங்களினூடாக விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து வந்து தற்போது 'தகவல் தொடர்பு யுகம்' என்ற உன்னத இடத்தை அடைந்திருக்கின்றது. நவீன தகவல் சக்தியானது அனைத்து உற்பத்திக் காரணிகளையும் மேவிக் காணப்படுகின்றது. மேலும், எதிர்காலத்தில் இதைவிட நவீனமானதும் சிக்கல் தன்மை மிக்கதுமான கண்டுபிடிப்புக்கள், கண்டுபிடிக்கப்படும் முன்னர், ஒரு கண்டுபிடிப்பிற்கும் அது தொடர்பான அடுத்த கண்டுபிடிப்பிற்கும் இடையேயுள்ள காலம் அதிகமாக இருந்தமையால் புதிய கண்டுபிடிப்புக்களை உள்வாங்கி அனுபவிப்பதில் அதிக சிரமம் இருக்கவில்லை. ஆனால், இன்றோ ஒரு கண்டுபிடிப்பிற்கும் அது தொடர்பான இன்னொரு கண்டுபிடிப்பிற்கும் இடையேயான காலம் மிகக்குறுகியதாய் உள்ளது. எனவே, புதிய கண்டுபிடிப்பை விளங்கிக் கொள்வதற்கும் அதன் பயனை விரைந்து அனுபவிப்பதற்கும் வாழ்க்கை முழுவதும் கற்றலில் ஈடுபடவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இன்றைய மாணவர்களின் காலத்தில் இக்கட்டாயம் மேலும் அழுத்தம் பெறும்.

### வாழ்க்கை மாதிரிகளில் மாற்றம்

நவீன தகவல் தொழில்நுட்ப முன்னேற்றமானது மக்களின் வாழ்க்கை மாதிரிகளில் பாரியளவிலான செல்வாக்கைக் கொண்டிருக்கும். தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் நிறுவனங்களின் இயல்புகளில் மாற்றங்கள் தோன்றும். சேவை நோக்கம் இல்லாத, இலாப நோக்கத்தை மட்டும் கொண்ட தனியார் மயமாக்கல் கொள்கை காரணமாக மக்களின் அடிப்படைத் தேவைகளைவிட ஆடம்பரத் தேவைகள் முன்னிலைப்படுத்தப்பட்டு வாழ்க்கை முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படும்.

"அலுவலகம் இருக்கும்; கடதாசி இருக்காது" என்ற வாசகம் நிதர்சனமாகும் விதத்தில் கணிப்பொறி வலைக் கட்டமைப்பு மூலம் கடதாசிகள் அற்ற அலுவலகங்கள் தோன்றும். 'உலகமயமாதல்' என்ற எண்ணக்கரு வலிமை பெற்று உலக நாடுகள் ஒன்றுடன் ஒன்று பல்வேறு தேவைகளுக்காகப் பிணைக்கப்படுவதோடு ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாகவும் அமையும். உலக மக்கள் தமக்கிடையே தொலை மாநாடு (Tele Conference), தொலை மருத்துவம் (Tele Medicine), தொலை வங்கி (Tele Bank) என்பனவற்றை ஏற்படுத்தி விரைந்து பயனை அனுபவிப்பர். இவற்றினைக் கையாளத் தெரியாதோர் வாழ்க்கையில் பின்னிற்பர். தற்போது மேற்கூறிய மாற்றங்கள் வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் காணக்கூடியதாகவுள்ளது.

### தொழில் உலகின் சிக்கல் தன்மை

தற்போது கல்விகற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் தொழில் உலகுக்கு வரும்போது அறிவுத்துறை சார்ந்த தொழில்களிலேயே பெரிதும் தங்கியிருப்பர். மூலதனத்தைக் கொண்டிருக்கும் முதலாளிமார்களை விட அறிவுத்துறை சார்ந்த தொழிலாளர்கள் அதிக வருமானத்தைக் கொண்டிருப்பதோடு முடிவெடுக்கும் அதிகாரத்தையும் கொண்டிருப்பர். எனவே எதிர்காலத்தில் தொழில் உலகு அறிவு சார்ந்ததாகவே இருக்கும். கடந்த காலங்களில் தொழில்




உலகில் குறித்த ஒரு தொழிலைச் செய்து வந்த ஒருவர் மூப்படைந்து ஓய்வூதியம் பெறும்வரை அத்தொழிலையே செய்துவந்தார். எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகள் குறைவாகவே இருக்கும். "ஒரே தொழிலில் சிறைப்படாது இருத்தல்" என்ற எண்ணக்கரு வலிமைபெற்று, மக்கள் தொழிலுக்குத் தொழில் நாட்டுக்கு நாடு மாறிக்கொண்டேயிருப்பர்.

எனவே, அவர்கள் புதிய சூழ்நிலைக்கு மட்டுமன்றி புதிய தொழில்களின் தேவைகளுக்கும் ஏற்றவிதத்தில் விரைந்து தம்மை மாற்றியமைத்து நிலைமையை அனுசரித்து செல்லவேண்டிய தேவை ஏற்படும். எனவே, இன்றைய மாணவர்களின் கல்வி இலக்கு, சர்வதேசத் தொழிற் சந்தையில் போட்டிபோட்டு வேலையொன்றைப் பெற்றுக்கொள்வதாக இருப்பதோடு, பன்முக நிபுணத்துவ ஆற்றலைப் பெற்றுக்கொள்வதாகவும் இருக்கும். மேலும் தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ள விரும்பும் இளைஞர்கள் பல்வேறு வயதுப் பிரிவினரோடும் பல்துறை அனுபவம் மிக்கவர்களோடும் போட்டி போட்டே வேலையொன்றைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

### உள நெருக்கடிகள்

கடந்த காலங்களைப் போலன்றி எதிர்காலத்தில் குடும்ப உறவுகள் ஆரோக்கியமாக இருக்கப்போவதில்லை. கணனியின் முன்னும் இயந்திரங்களின் பின்னணியிலும் அதிக நேரம் செலவிடுவதால் மனிதர்களின் அந்நியமாதல் உணர்வு அதிகரிக்கும். சக மனிதரின் பிரச்சினைகளைப் புரிந்து பரஸ்பரம் உதவி செய்து வாழும் வாழ்க்கை முறை, அருகுவதால் உளநெருக்கடிகள் அதிகரிக்கும். எதிர்காலத்தில் வயோதிபப் பிரிவினிடையேதான் உளநெருக்கடிகள் அதிகளவில் உண்டாகும். இதற்கான ஆரம்ப அறிகுறிகள் தற்போது தென்படத் தொடங்கியுள்ளன என்பதை வயோதிபரின் தற்கொலை முயற்சிகள், காணாமல் போதல் போன்ற நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. முன்னைய காலங்களில் கூட்டுக் குடும்பமுறைமையில் வயோதிபர்கள் உள நெருக்கடியற்ற சூழலில் வாழ்ந்தார்கள். எதிர்காலத்தில் வயோதிபப பிரிவினரை வேண்டத்தகாதவர்களாகக் கருதி உதாசீனப்படுத்தும் போக்கு அதிகரிக்கும். எனவே, இன்றைய மாணவர்கள் முதியோருக்கு ஏற்ற மரியாதையையும் பாதுகாப்பையும் தரமுன்வரவேண்டும்.

உளமுரண்பாடுகள் தோன்றும் போது அவற்றை எதிர்கொண்டு, உளஆரோக்கியத்தை தக்கவைப்பதற்குரிய பயிற்சிகளை பாடசாலை மட்டத்திலேயே வழங்கவேண்டும் என்பதற்காகவே, புதிய கல்விச் சீர்திருத்தத்திலே விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத் திறன்கள் ஒரு தேர்ச்சியாகக் கொள்வதோடு தொடர் தொழில் ஆற்றுப்படுத்தலிலும் (Career Guidence) உளவளத் துணையிலும் (Counselling) கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

"உரிச்சு வைச்சு தகப்பனைப் போலவே இருக்கிறான்" என்றும் "தாயைப் பார்த்தால், மகளைப் பார்க்கத் தேவையில்லை" என்றும் பலர் கூறக் கேட்டிருக்கின்றோம். பெற்றோருடன் வாழ்ந்து பெற்றோரின் தொழிலையே செய்த சமுதாயத்தில் உருவ அமைப்பிலும், உளஅமைப்பிலும் பெற்றோரைப் போலவே பிள்ளைகள் இருந்தனர். ஆனால் இன்றைய நிலை அவ்வாறில்லை. பிள்ளைகளின் உருவஅமைப்பு பெற்றோரைப் போன்றதாயினும், மன அமைப்பு வேறுபட்டதாகவே இருக்கின்றது. ஏனெனில், பிள்ளைகளின் மன அமைப்பியலை உருவாக்கியதில் பொருத்தமற்ற நடத்தையுடைய காட்சிகளும், தவறான மனிதர்களும், செல்வாக்குச் செலுத்தியிருப்பதைக் காணலாம்.

**க.மு.கனகலிங்கம்**
ஆசிரியர்,
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

இவற்றைத் தவிர்ப்பதற்காகவே புதிய கல்விச் சீர்திருத்தத்திலே ஆறாம்தர மாணவர்கள் முதலாம் தர மாணவர்களுடன் பழகி உதவி செய்வதன்மூலம், சிறந்த மன அமைப்பியலை உருவாக்கும் முயற்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### உடல் நலமும் சுகாதாரமும்

சூழல்மாசடைதல் என்ற தொடர் நிகழ்வு புவிக்கோளத்தில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருப்பதால் மனிதர்களின் உடனலமும், சுகாதாரமும் பாதிப்புறும். தான் வாழும் சூழலை மாசடையாமல் பேணும் திறன் ஒவ்வொரு மாணவருக்கும் இருக்கவேண்டும் என்பதற்காகவே சூழல்தொடர்பான உடன்பாடான எண்ணக்கருக்கள் கொண்ட பாடத்திட்டம் நடைமுறையில் உள்ளது. எனினும், சனத்தொகை அதிகரிப்பும் மனிதர்களின் தேவைகளின் பெருக்கமும் சூழல் பாதுகாப்பினை நலிவடையச் செய்யும். உயிரியல், இரசாயன ஆயுதங்களின் இருப்பு உயிரினங்களின் உடனலத்தை மேலும் அச்சுறுத்தும்.

உலகத்தின் ஒருமூலையில் உண்டாகும் ஒருபுதிய தொற்று நோயை தவிர்ப்பதற்காக எல்லா நாட்டு மக்களும் 'தடுப்பு ஊசி' போட்டுக் கொள்ள வேண்டி வரும். எனவே இதுபற்றிய விழிப்புணர்வும் பொதுச் சுகாதாரத்தைப் பேணும் மனப்பாங்கும் ஒவ்வொருவரிடமும் ஏற்படுத்தப்படவேண்டும். (12ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சாலைக் காட்சிகள்



மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்தி சங்க முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் மாணவர்களின் வரவேற்பு நடனத்தைப் படத்தில் காணலாம். (ஒ-185)



வரணி தென்னிந்தியத் திருச்சபை சிறுவர் பராமரிப்பு நிலைய சிறார்களின் விளையாட்டுப்போட்டி நிகழ்வில் மாணவர் வரவேற்பு கீதம் இசைக்கின்றனர். நிகழ்வின் பிரதம விருந்தினர் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் சி.தர்மலிங்கம், திருச்சபை பிரதமகுரு சகோ.யொ.நிவில் ரூபராஜ், வடமாகாண சிறுவர் பராமரிப்பு அலுவலர் வி.மித்திரரஞ்சன் உட்பட நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம். (ஒ-170)



பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் அண்மையில் நடைபெற்றபோது அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சங்கானை கல்விக் கோட்ட கல்விப்பணிப்பாளர் சி.செல்லையாவின் பாரியார் திருமதி என்.செல்லையா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார். வித்தியாலய அதிபர் கா.நடராஜா, பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படம் : சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



வட்டுக்கோட்டைப் பேராலய முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வீதி அபிவிருத்திச் சபை பொறியியலாளர் திருமதி ஹூல், மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குகிறார்.

# காலம் வரும் வரையும்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது இறுதியில் கட்சியைப் பிளவுபடுத்துவதாகவே அமையும். ஜே.வி.பியினருக்கும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குமிடையே கூட்டு உருவாவதால் மட்டும் ஐ.தே.கட்சியின் பலம் அதிகரிக்கப்போவதில்லை. ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் உள்வீட்டுப் பூசல்கள் உருவாகி கட்சி நலிவடைய நேர்வதாலும், ஐ.தே.கட்சியின் பலம் அதிகரிக்கப் பெரும் வாய்ப்பு உண்டாகும்.

எனவே, ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் அபிப்பிராய பேதங்கள் உருவாகி அதன் மூலம் பிளவுகள் தோன்ற இடமளிக்காத வகையில் அக்கட்சியின் உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்படவேண்டியது அவசியமாகும். அவ்வித ஒற்றுமை பேணுவதன் மூலம் தான் வழங்கும் சலுகைகளை மட்டும் ஏற்று ஜே.வி.பியினரைக் கூட்டில் இணைந்துகொள்ள இணங்க வைக்கும்சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள இயலும்.

இவ்விரு கட்சிகளுக்குமிடையே எதிர்பார்க்கப்பட்ட கூட்டுமுயற்சி வெற்றியடையவில்லை என்பதால் ஸ்ரீ.ல.சு.கட்சி கலவரம் அடையத் தேவையில்லை. தமது அரசியல் வரலாற்றில் மொத்தக் காலமும் இடதுசாரிக்கட்சிகள் ஐ.தே.கட்சி மீது எதிர்ப்புணர்வையே வெளிப்படுத்தி வந்துள்ளன. ஆனால் பொதுத் தேர்தல்கள் அண்மிக்கும் வேளைகளிலேயே ஐ.தே.கட்சி மீது எதிர்ப்புணர்வைத் தூண்டி வளர்த்து அதன்மூலம் ஐ.தே.கட்சியின் தேர்தல் வெற்றிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை ஸ்ரீ.ல.சு.கட்சி கடைப்பிடிக்க .வேண்டும்.

அவ்விதம் இடதுசாரிகள் தம் அரசியல் வரலாற்றுக்காலம் முழுமையும் ஐ.தே.கட்சியுடன் எதிர்ப்புடன் இயங்கிவந்த வேளைகளில் ஸ்ரீ.ல.சு.கட்சி பொய்த்தூக்கம் போட்டு வந்தது. இன்றும் அதே[illegible] பொய்த்தூக்கத்திலேயே ஆழ்ந்துள்ளது. ஜே.வி.பியினர் ஐ.தே.கட்சி அரசு மீதான அரசியல் விரோதத்தை தற்போது வெளிப்படையாகவே வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தவேளையில் தான் ஒருபக்கத்தில் ஒதுங்கியிருந்துவிட்டுப் பொதுத்தேர்தல் அண்மிக்கும் வேளையில் அரசு மீது விரோதத்தை வெளிப்படுத்தி அரசைத் தூக்கியெறிய முனையும் யுக்தியை ஸ்ரீ.ல.சு.கட்சி கடைப்பிடிக்க வேண்டிய நிலையிலுள்ளது. இவ்விடயத்தில் ஜே.வி.பி. ஏற்கனவே அந்த வேலையை அழகாக முன்னெடுத்து இயங்கிவருவதால் ஸ்ரீ.ல.சு.கட்சி பதற்றமடைய வேண்டிய அவசியம் இல்லை. அதற்காக ஜே.வி.பியினருக்கு பெறுமதியான பரிசளிக்க வேண்டியதில்லை. இச்சகல எதிர்ப்புக்களையும் சந்திரிகாவின் ஸ்ரீ.ல.சு.கட்சி தூக்கி வீசிவிடப் போகிறது. [illegible] கிறார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.டி.சி.ஏ. வெற்றிக் கிண்ணத்தை ஜொலிஸ்ரார் வி.க. கைப்பற்றியது!

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய ஜேடிசி.ஏ. வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ். ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. யாழ்.ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும், ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 85 ஓட்டங்களால் பெருவெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 27.05 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அணி சார்பாக ஆர். இராஜாதித்தன் ஒரு சிக்ஸர், ஆறு பவுண்டரிகள் உட்பட 54 ஓட்டங்களைப் பெற்றார், எஸ்.மகேந்திரராசா 29ஓட்டங்களைப் பெற்றார்.

ஜொனியன்ஸ் அணியின் பந்து வீச்சு சார்பாக எம்.மயூரன், ச.அகிலன் இருவரும் தலா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 124 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம், ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் துல்லியமான பந்துவீச்சுக்கு முகம் கொடுக்கமுடியாமல் 38 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இவ்வாட்டத்தின் நாயகனாக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.இராஜாதித்தன் தெரிவுசெய்யப்பட்டார். (எ-5)

# விளையாட்டு

## நாவாந்துறை றோ.க, சென்.ஜேம்ஸ் உதைபந்தாட்டச் சம்பியன்கள்!

யாழ்ப்பாணம்,ஒக்,13

யாழ் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை றோ.க.பாடசாலை, புனித சென்.ஜேம்ஸ் வித்தியாலயம் என்பன வலய மட்டச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

14 வயதிற்கு உட்பட்டோருக்கான இறுதி ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயமும், யாழ். இந்துக் கல்லூரியும் மோதின. இதில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் திறமையாக விளையாடி 5-0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது.

16 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயமும், நாவாந்துறை றோ.க.பாடசாலையும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததால் 'பனால்டி உதைமூலம்' நாவாந்துறை றோ.க.பாடசாலை 4-3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மூன்றாம் இடங்களுக்காக நடைபெற்ற ஆட்டங்களில் 16வயதுப் பிரிவில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயமும், 14வயதுப் பிரிவில் நாவாந்துறை றோ.க.பாடாலையும் வெற்றியீட்டின. (எ-5)

## உதைபந்தாட்ட இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.13

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் ஒரு மணி முதல் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் கல்விவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கலவிப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார்.

இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**16வயதுப் பிரிவு**

3ஆம் இடத்திற்கான ஆட்டம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் எதிர் அராலி இந்துக் கல்லூரி.

***இறுதி ஆட்டங்கள்***

**16வயதுப் பிரிவு**

மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

**18வயதுப் பிரிவு**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம். (எ-5-86-152)

★ ★ ★


யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 18 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்த அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ யாழ்.மத்திய கல்லூரி எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.

☆ யாழ்.இந்துக் கல்லூரி எதிர் யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி.

இதேவேளை, சஞ்சீவன் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் கால் இறுதியாட்டங்கள் இன்று காலை 8மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஐ-5)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீரர் சி.விநோத்திற்கு, கல்லூரியில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் க.சிவசுப்பிரமணியம் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-5-90)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கந்தசாமி

மட்டுவில் வடக்கு, முத்துமாரி அம்மன் கோயில் ஒழுங்கை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தசாமி 10.10.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2003) திங்கட்கிழமை கொழுமபில் நடைபெற்று, பி.ப. 5 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கிருலப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3/85, ஸ்ரீசித்தார்த்த வீதி,*
*கிருலப்பனை, கொழும்பு - 5*
***T.P. 01 251 2403***

தகவல்:
திருமதி க.விசாலாட்சி
(மனைவி)

(23605) (14-17)


தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
அதிரடித் தள்ளுபடி
5% - 25% விசேட விற்பனைகள்

✣ விலைக் கழிவுகள், சலுகைகள்
✣ ஒன்றை வாங்கி மற்றையதை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
✣ எங்கும் இல்லாத குறைந்த விலையில் தரமான பொருள்கள் ஒரே கூரையின் கீழ் பெற்றிட......

விரையுங்கள்! விரையுங்கள்!! இன்றே...

தினசரி, பண்டிகைத் தேவைகளுக்கு எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்

முதலாவது முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட ஸ்தாபனம்

- மளிகைப்பொருள்கள்.
- வெளிநாட்டுப் பழவகைகள்.
- ஐஸ்கிறீம் வகைகள்.
- மருந்து, பால்மா வகைகள்.
- தங்க நகை ஆபரணங்கள்.
- சிகை அலங்காரப் பொருள்கள்.
- வாசனைப் பொருள்கள் (சென்ற்).
- வீட்டுப்பாவனைப் பொருள்கள்.
- அன்பளிப்புப் பொருள்கள்.
- கவரிங், அழகுசாதனப் பொருள்கள்
- இலத்திரனியல் பொருள்கள்.
- இன்னும் பல பல .........




ஒரு தடவை விஜயம் செய்து பாருங்கள் மீண்டும் மீண்டும் வரத்தூண்டும்......

Annai Nagaa Food City
For all your daily needs

அன்னை நாகா புட் சிற்றி

175, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

Tel : 021 – 222 5515
Fax : 021 – 222 5223

(C/36678)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BARBARA MULVANEY
## Computer Training Centre
123, Temple Road, Jaffna
T.P.:-222-5971

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

*Diploma in Ms Office (4 Months)*
*Diploma in Desktop Publishing (4 Months)*
*Diploma in Information Technology (4 Months)*
*Diploma in Software Application (4 Months)*
*Diploma in Photo Graphics (3 Months)*
*Diploma in Programming (4 Months)*
*Diploma in Computer Handlings (3Months)*
*Diploma in Kids Course (3Months)*

அனைத்துப் பாடநெறிகளுக்குமான வகுப்புக்கள் 20ம் திகதி ஆரம்பமாக இருப்பதால் 18ம் திகதிக்கு முன்னமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

*Internet browsing facilities are here.*


# யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி

பழைய மாணவர் மன்றத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் (பொன்விழா) ஒன்று கூடலும் வருடாந்த பொதுக்கூட்டமும் 02.11.2003 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருப்பதால் அங்கத்துவத்தைப் புதுப்பிப்போரும் புதிதாக சேர விரும்புவோரும் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.

1. பிரேரணைகள் இருப்பின் 29.10.2003 இற்கு முன்னர் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.
2. ப.மா.மன்றம் தொடர்பில்லாத பழைய மாணவரும் அங்கத்தவர் அனைவரும் தங்கள் தற்போதைய விலாசங்களை தந்துதவவும்.

வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ப.காண்டீபன்
*செயலாளர் ப.மா.ம.*

(23602) (25-24-11-18)


# யூனிவேசல் கல்வி நிலையம்
மந்திகை
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| Diploma Courses | Certificate Courses |
|---|---|
| M.S. Office | Visual Basic |
| Desktop Publishing | Java |
| Internet Technology | C++ |
| | Photo Shop |
| Diploma in English (Special Classes for A/L Students) | Page Maker |
| | Coral Draw |

பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

விரிவுரைகள் நவம்பர் 5ஆம் திகதி ஆரம்பமாகும்.

மந்திகை.

நிர்வாகி,
யூனிவேசல் கல்வி நிலையம்.

(C/30676) (26-24-11-19)


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
12 - 05 - 1953



ஆண்டவன் அடியில்
28 - 09 - 1999

புங்குடுதீவு

## அமரர் அம்பலவாணர் சோதிலிங்கம்

(கஜமுகா ஸ்ரோர்ஸ் வெற்றிலைக் கடை)

திதி: 13.10.2003

அதிர்ச்சி இன்னும் அகலவில்லை
அதற்குள் ஆண்டுகள் நான்கு
ஆகிவிட்டது - அப்பா
அப்பா எங்கள் ஆருயிரே
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமா
ஆசையுடன் எம்மை வளர்த்து
நல்வழியில் வழிகாட்டி
இன்று தனியே தவிக்கவிட்டு
எங்கு சென்றீர்கள் - ஏனப்பா
எங்களை ஒரு முறையேனும் காண
ஓடோடி வரமாட்டீர்களாப்பா!

உங்கள் நினைவோடு என்றும் வாழும்:
அன்பு மனைவி - கமலாநிதி
பிள்ளைகள்: மதீஷன், தஞ்சுகி, சுபர்ணா, சோபிகா
மருமக்கள்: ஜெயச்சந்திரன், இளங்கீரன்.

*33, சிவன்பண்ணை வீதி,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.* (23606) (26-24-11-18)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 516 |
|---|---|
| திகதி | 10.10.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5240273-5255402

**வெற்றி இலக்கங்கள்** 03 14 16 21

**லக்கினம்** மகரம்



**ஜக்பொட் பரிசு**
**ரூபா. 3,345,700/-**
**வெல்லப்பட்டது.**

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 333,322 | 10 | 3,333,220 |
| 2 இலக்கங்கள் | 30,652 | 20 | 613,040 |
| 1 இல + லக்கினம் | 30,194 | 30 | 905,820 |
| 2 இல + லக்கினம் | 2,756 | 100 | 275,600 |
| 3 இலக்கங்கள் | 831 | 500 | 415,500 |
| 3 இல + லக்கினம் | 67 | 5,000 | 335,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,345,700 | 3,345,700 |
| மொத்தம் | 397,826 | - | 9,523,880 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 9,523,880/-

தொடர் இல. 4261190க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5247701-4-08
5246898-5-77
5245002-8-66
5247323-2-55
5250706-7-29

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்





உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3037697 இருந்து
3056286 வரை
சீட்டிழுப்பு இல. 1443
திகதி 11.10.2003

**வெற்றி எண்கள்** 01 05 20 35 47

**போனஸ் எண்** 33

## ஜக்பொட் பரிசு
## ரூபா.3,349,750/- வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,349,750/- | 3,349,750/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 107 | 10,000/- | 1,070,000/- |
| 3 | 5,864 | 500/- | 2,932,000/- |
| 2 | 98,078 | 20/- | 1,961,560/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 120,656 | 10/- | 1,206,560/- |

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட் **ரூபா.1,500,000/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.10,819,870/-

தொடர் இல. 2078952க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 15ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3053226-8-44
3045942-2-61
3052560-4-07
3040775-5-49
3041385-0-98

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் ஆள்புல உரிமையை ஒன்றுபட்டு நின்று கோருகின்றனர்

## மாலதி நினைவு நிகழ்வில் இளம்பரிதி தெரிவிப்பு



கோப்பாய்,ஒக்.13

ஆள்புல உரிமை வழங்கப்படவேண்டும் என்பதில் தமிழர்கள் ஒன்றுபட்டுள்ளனர். எனினும், எம்மிலிருந்து விலகி நிற்கும் ஒரு சிலரும் இணைந்தால் நிறைவான - நிம்மதியான வாழ்வை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 16ஆவது ஆண்டு நினைவு விழாவும், தமிழீழப் பெண்கள் எழுச்சி நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் கந்தசுவாமி ஆலய வீதியில் அமைந்துள்ள ஞானபண்டித சைவ விருத்திச் சங்க கலாசார மண்டபத்தில் கோப்பாய் வடக்கு மகளிர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவி செல்வி கந்தையா மனோன்மணி தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய அவர், தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திர உணர்வோடும் தளராத பற்றுறுதியோடும் இந்நிகழ்வில் நீங்கள் கலந்துகொண்டுள்ளீர்கள். மேஜர் முரளி, கப்டன் காந்தி ஆகியோர் வாழ்ந்த மண் இது. எமது சமூகத்தில் பெண்கள் அடங்கியும் அடக்கப்பட்டும், முடங்கியும் முடக்கப்பட்டும் இருந்துள்ளார்கள். அத்தகைய சமூக சூழ்நிலைக்குள் இருந்த பெண்கள்தான் இன்று சமூகத்தில் பல்வேறு வழிகளிலும் மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்திய முதல் பெண் 2ஆம் லெப்டினன்ட் மாலதிதான்.

இந்த வகையில் இந்தநாள் முக்கியத்துவம் வாய்ந்ததும் பெருமைக்குரியதும் ஆகும். தொடர்ந்து தலைவரின் எண்ணக்கருவில் உருவாகிய எண்ணங்கள், சிந்தனையின் அடிப்படையில் பல மாற்றங்களை பெண்கள் இந்த மண்ணில் ஏற்படுத்தியுள்ளனர்.

ஆண்களும், பெண்களும் சமதுவமானவர்கள் என்ற எண்ணப்பாடும் தோற்றப்பாடுகளும் பெண் படைப் பிரிவுகள் இன்று வளர்ச்சியடைய காரணமாகும்.

உலகில் நடந்து முடிந்த போராட்டங்கள் ஆயினும் சரி, நடந்துகொண்டிருக்கும் போராட்டங்கள் ஆயினும் சரி தீச்சுவாலை யுத்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சண்டையாகும்.

இந்தப் போரில் கலந்துகொண்டவர்களில் 60வீதத்திற்கு மேற்பட்டவர்கள் பெண்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும் இதேபோன்று பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறு தொழில்துறைகளிலும்கூட பெண்களின் பங்களிப்பு மிகவும் அதிகளவில் காணப்படுகின்றது.

எமது மண்ணில் இன்று பெண்கள் பங்களிப்பு அதிகரித்துச் செல்ல எமது விடுதலைப் போராட்டமும் ஒரு காரணமாகும். அயர்லாந்தில் நடந்த பேச்சுக்களில் கூட அரசியல் ரீதியாக பெண்கள் கலந்துகொண்டுள்ளனர்.

மண் விடுதலையை மட்டும் இலக்காகக் கொண்டு போராட்டம் இடம்பெறவில்லை. மண் விடுதலையுடன் பெண் விடுதலை, சாதியம், பொருளாதாரம் என்று பலதுறைகளிலும் விடுதலையையும் மையப்படுத்தியே விடுதலைப் போராட்டம் நடைபெறுகின்றது.

சமூகத்தில் இருந்து பிரிக்கமுடியாதவர்கள் பெண்களும் ஆண்களும் ஆகும். இதனை பால்ரீதியாக பிரித்து நோக்கினால் அது மானிட வரலாறில் மிகவும் கொடுமையான செயலாகும்.

இன்றைய நிலைமையில் பெண்கள் ஒன்றுபட்டு நிறுவனமயப்பட வேண்டியது அவசியமாகும். சமூகம் போடும் தடைகளையும் மூட நம்பிக்கைகள், சம்பிரதாயங்கள் உடைத்தெறியப்படவேண்டும்.

பெண்ணியம் பற்றி பேசுவதிலேயோ அன்றி பத்திரிகைகள் சஞ்சிகைகளில் அறிக்கைகளை பிரசுரிப்பதிலேயோ சுவரொட்டிகளை ஒட்டுவதிலேயோ பயன் கிடைக்கப்போவதில்லை. ஆனால், தலைவரைப் பொறுத்தவரையில் உண்மையான செயற்பாட்டின் மூலம் பெண்ணின் விடுதலை - சமத்துவம் என்பதை செயல் ரீதியாக வெளிக்காட்டியுள்ளார்.

சில அரசியல்வாதிகளினதும் நிர்வாக அதிகாரிகளினதும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது வெட்கப்பட வேண்டியுள்ளது. இம்மண்ணில் மலைபோல தேவைகள் இருக்கின்றன. ஆனால், இன்று குண்டும் குழிகளையும் மூடும் நடவடிக்கைகளையே இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது அரச அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்படும் உதவிகள் வாழ்வதற்காக வழங்கப்படவில்லை. மாறாக வாழ்க்கையை இழக்கவேண்டும் என்பதற்காகவே வழங்கப்படுகின்றன. இதனை மக்கள் ஒவ்வொருவரும் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார்.

யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி தனது உரையில் -

பிற்போக்கான - இறுக்கமான கட்டமைப்பு சமுதாயத்தில் இருந்து வெளிவந்த பெண் போராளிகளே அரும்பெரும் சாதனைகளை எல்லாம் நிகழ்த்தியுள்ளனர். அதுமட்டுமன்றி பெண்களின் ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

எமது சமூகம் பெண்களிற்கு பல கட்டுப்பாட்டு வளையங்களை இட்டிருப்பதனால், பெண்ணானவள் ஒரு குறிப்பிட்ட வளையத்திலேயே நிற்க வேண்டியுள்ளது.

ஆனால், நம் தேசியத் தலைவரின் தலைமையிலே சேர்ந்து முற்போக்கான சிந்தனைகளை வளர்த்து சிறந்த ஆளுமைமிக்க அணியினராக தேசத்தின் விடுதலைக்காக தம்மையே அர்ப்பணித்துப் போராடும் பண்பைக் கொண்டுள்ளோம்.

இந்நிலைமை எதிர்காலத்தில் எமது தேசத்தில் ஆண் - பெண் சமத்துவத்தைப் பேணி நல்லதொரு ஆரோக்கிய சமுதாயக் கட்டமைப்பை ஏற்படுத்தும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் கலாநிதி புஸ்பரட்ணம் தமது உரையில் பாரதி கண்ட புதுமைப்பெண் இங்குதான் உள்ளாள். இங்கு பெண் விடுதலை பற்றிப் பேசத் தேவையில்லை. தேச விடுதலையுடன் பெண் விடுதலையும் முழுமையடைந்துவிடும்.

உலகநாடுகள் எமது இனத்தை தேசிய இனமாக அங்கீகரிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றன. ஒரு குழுவின் கீழ் ஒரே அணியாக இருப்பதனால் தேசிய இனமாக நாம் அங்கீகரிக்கப்படவுள்ளோம் - என்றார். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (எ-72-86-180)

# பல்கலை வளாகத்திலிருந்து பொலீஸார் வெளியேற்றம்

வலி.வடக்கு,ஒக்.13

யாழ்ப்பாணப பல்கலைக்கழகத்தினுள் ஆயுதங்களுடன் காவல் கடமைக்கு வந்த பொலீஸார் பல்கலைக்கழக மாணவர்களினால் வெளியேற்றப்பட்டனர்.

யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கு சட்ட உதவி மன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று யாழ்.பல்கலைக்கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. இதில் சட்ட உதவிகள் மன்றத் தலைவர் ஏஸ்.எஸ்.பி. விஜயரெட்ண கலந்துகொண்டார். அவருக்கு பாதுகாப்புக்கு வந்த பொலீஸார் ஆயுதம் தாங்கியபடி பல்கலைக்கழக வளாகத்துக்குள் நின்றிருந்தனர்.

இதனை அவதானித்த பல்கலைக்கழக மாணவர்கள் ஆயுதங்களுடன் பொலீஸார் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நிற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் பொலீஸார் வளாகத்தை விட்டு வெளியேறவேண்டும் என்றும் மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். அதனைத் தொடர்ந்து பொலீஸார் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து வெளியேறினர். (ஒ-86)

# வலி.வடக்கில் மீள்குடியமர உடன் அனுமதி வழங்குக!

## 15 குடும்பங்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு மகஜர்

வலி.வடக்கு,ஒக்.13

உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்த பன்னிரண்டுபேர் தம்மை சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும் எனக் கோரி பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

சுமார் 15வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களில் 12பேர் தனித்தனி மனுக்களை சட்டத்தரணி மூலம் தமது நிலைமையை வெளிப்படுத்தி மகஜரை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வீடு வாசல்களைக் கைவிட்டு வந்தமையால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளோம். இதன் மூலம் சொந்த இடத்தில் வாழ்வதற்கான அடிப்படை மனித உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது.

அவசரகால நிலைமை காரணமாக எமது சொந்த வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டோம்.

எனினும், விடுதலைப் புலிகளுக்கும அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு கைச்சாத்திடப்பட்டதை அடுத்து எமது இயல்பு வாழ்க்கை-மீண்டும் வழமைக்குத் திரும்பும் எனவும் எதிர்பார்த்தோம்.

ஆனால், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடம் கழிந்தும் இதுவரை எமது விடயத்தில் ஆக்கபூர்வமான முடிவு எடுக்கப்படவில்லை.

நீண்டகாலமாக இருப்பிட வசதியின்றி பல்வேறு துன்பங்களுக்கும் நாம் உள்ளாகி வருகின்றோம். இந்த நிலைமையில் எம்மை மீண்டும் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதித்து எமது வாழ்வியல் உரிமையை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-86)



தாவடி வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையத்தை சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் (306பீ) லயன்ஸ் டாக்டர் றோஹான் பெரேரா திறந்துவைத்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

இந்த பஸ்தரிப்பு நிலையத்தை அமைத்த லயன்ஸ் கழகத்தின் பிரதேச தலைவர் லயன்ஸ் டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணமும் படத்தில் காணப்படுகின்றார். (எ-5-139)

# வலிகளின் மத்தியில் சுயமாய் விரிந்த ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்கள்

**கா.ஞானதாஸ்**
**திட்ட இணைப்பாளர், 'ஸ்கிறிப்ற் நெற்'**

தாயகத் திரைப்படத்துக்கான அத்திவாரம் பல வருடங்களுக்கு முன்பே போடப்பட்டு விட்டது. எந்தப் பயிற்சியும் இன்றி, அனுபவங்களும் இன்றித் திரைப்படம் பார்த்தல், அதிலிருந்து கற்றல், பின் படைத்தல் எனும் செய்முறையை எம் தேசத்துப் படைப்பாளிகள் யாழ்.மண்ணிலும், வன்னியிலும் எப்போதோ தொடங்கி விட்டனர். திரைப்படம் எனும் வலுமிக்க ஊடகத்தினூடாக வலிமிக்க நமது கதைகளை உலகத்துக்குச் சொல்ல இவர்கள் எடுத்த முயற்சிகள் அபார துணிச்சல்மிக்கவை. தமது சொந்த முயற்சியில் - ஒரு குழந்தை தன்னம்பிக்கையுடன் முதல் காலடியை எடுத்துவைப்பதைப் போல - எந்தத் தாழ்வுச் சிக்கலும் இன்றி - தங்கள் காலை எடுத்துவைத்தனர். முதற் காலடியை எடுததுவைத்த குழந்தைக்கு எந்தளவுக்கு மகிழ்ச்சியும் மேலதிக நம்பிக்கையும் உண்டாகுமோ, அதே மகிழ்வு, அதே தன்னம்பிக்கை, அதே கர்வம்...

முயற்சித்தல், தவறுவிடுதல், மீண்டும் முயற்சித்தல், தவறு விடுதல்.... தவறுகளிலிருந்து கற்றல், கற்றதை நடைமுறைப்படுத்தல், அவற்றைப் பிறருக்குக் கற்பித்தல்.... இதுவே எமது திரைப்படத்துறையின் வளர்ச்சிப் பாதையாக இருந்து வந்தது, வருகின்றது. எமது தேசத்துப் போராட்டப் பாதையும் அதுவே. நாம் எந்த சித்தாந்தங்களிலும் இருந்து தொடங்கவில்லை. தேவைகள் எம்மைத் தேட வைக்கிறது. சூழல் எம்மைச் செயற்பட வைக்கிறது.

சிஷ்யன் தயாராக இருக்கும் போது குரு அவன் முன் பிரசன்னமாவார்..... திரைப்படம் எனும் விஞ்ஞானக் கலையை, கூட்டுக் கலையாகத் தம் சொந்த முயற்சிகளுக்கூடாக நிதர்சனமாக்கிக் கொண்டிருந்த நம் படைப்பாளிகளுக்கு அவர்களின் படைப்பாற்றலைச் சீர்படுத்த குறிக்கோளை நோக்கி அழைத்துச் செல்ல சர்வதேச தரத்திற்கு நமது படைப்புகளை உயர்த்த அகிலமெங்கும் அனைத்துச் சமூகத்தினரும் பார்க்க வழிசமைக்க ஒரு வழிப்படுத்தல் வேண்டியிருந்தது. சரியான குரு தேவையாக இருந்தது. அந்தவகையிலேயே 'ஸ்கிறிப்ற் நெற்' நிறுவனத்தின் வருகை அமைந்தது.

'ஸ்கிறிப்ற் நெற்' தனது வேலையை திரைக்கதை உருவாக்கற் பயிற்சி வழங்குவதன் ஊடாக ஆரம்பித்து இன்று இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர்களுக்கான பயிற்சி வழங்குதல், குறும்படங்கள் தயாரித்தல் எனும் நிலைக்குத் தன் வேலைத்திட்டத்தை நகர்த்தியுள்ளது. சுதந்திரமான எந்தப் படைப்பாளியும் விதிகளுக்குக் கட்டுப்பட்டவன் அல்ல. ஆனால், விதிகளைத் தெரிந்தவன்தான் விதிகளை மீறும், விதிகளைத் தாண்டிச்செல்லும் தகுதிபெற்றவன் என்பது இன்னொரு விதி.

தமது சொந்த முயற்சிகள், அனுபவங்கள், வெற்றிகள், தோல்விகளுக்கு ஊடாகத் தம்மை வளர்த்துக்கொண்ட நம் தேசத்துத் திரைப்படைப்பாளிகள் 'ஸ்கிறிப்ற் நெற்' மூலம் கிடைக்கக்கூடிய பயிற்சிகளுக்கு ஊடாக திரைப்படத் துறையின் நியம விதிகளையும், அதன் நடைமுறைகளையும் தொழில்நுட்பங்களையும் அவற்றுககும் அப்பால் திரைப்படத்துறையை எப்படி நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழில்துறையாக, கல்விசார் கலையாக்கமாக வளர்த்தெடுக்கலாம் என்பதையும் கற்றுக்கொள்ள முடிகின்றது.

இதன்மூலம் இனிவரும் காலங்களில் சர்வதேசத் திரைப்பட ரசிகர்களின் பார்வை ஈழத் திரைப்படங்களின் பக்கம் ஈர்க்கப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ★

# எதிர்காலத்தில்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூகோளமயமாதலின் நன்மைகளை அனுபவிக்கும் அதேவேளையில் அதன் தீய விளைவுகளையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும். காலம் காலமாக நாம் பேணி வந்த சிறந்த கலாசார விழுமியங்களைத் தக்கவைக்க பெரும் பிரயத்தனம் செய்யவேண்டியிருக்கும். பன்னாட்டுப் பண்பாட்டு விழுமியங்கள் என்ற அணிகலன் களைத் தொலைத்து விட்டு வெறும் 'மூளி'யாக நிற்க வேண்டி ஏற்படும். இது வேர்கள் இல்லாத விருட்சத்தின் நிலைக்கு ஒப்பானதாகும்.

பெரும் தகவல் தொகுதியும், உலகப் பன்மைக் கலாசாரமும் எமதுநாட்டுக்குள் வந்துகொண்டேயிருக்கும். இவைகளில் சிறந்தனவற்றைத் தெரிவு செய்வதில் மாணவர்கள் பெரிதும் இடர்படுவர்.

சமய பாடத்திலே விசேட திறமைச் சித்தி பெறும் மாணவர்களில் பலர் நடைமுறையிலே அச்சமய ஒழுக்கத்தை கடைப்பிடிக்காதிருப்பதை நாம் பலமுறை அவதானித்துள்ளோம். இந்நிலையில் மாணவரின் கற்றல் பயணம் குறித்த இலக்கினை அடையும் என நாம் எதிர்வு கூறமுடியாதுள்ளது.

எனவே மேற்கூறிய விடயங்களைத் தொகுத்து நோக்கும் போது மாணவர்கள் எதிர்காலத்தில் பலவகையான நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்பது தெளிவாகின்றது. மேலும் பிரச்சினைகளை வெற்றிகொள்ளும் மாணவரை உருவாக்கும் பொறுப்பு பெற்றோரிடமும் ஆசிரியரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே கல்வி மறுசீரமைப்பிலே கூறப்பட்டுள்ள, தகவல் தொடர்பாடல், சுற்றாடல் தொடர்பான திறன்கள், ஒழுக்கம் மற்றும் அறநெறி, விளையாட்டு மறறும் பொழுதுபோக்கு, கற்றலுக்காகக் கற்றல் போன்ற தேர்ச்சிகளை மாணவ சமுதாயம் பெற்றுக்கொள்ளும்போது எதிர்காலச் சவால்களை இலகுவாக வெற்றிகொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய காலகட்டத்தில் பல்கிப் பெருகிவரும் குற்றச்செயல்களால் பாதிக்கப்படும் சிறுவர்கள், பெண்கள், முதியோர்கள், சகலரது நலன்களையும் பாதுகாக்க எவ்வகையில் உதவலாம் என்பது தொடர்பான விசேட சட்டப் பட்டறை ஒன்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றத்தால் யாழ். பல்கலைக்கழகப் புவியியல்துறை மண்டபத்தில் நேற்று நடத்தப்பட்டது.

சட்ட உதவி மன்றத்தின் தலைவர் எஸ்.எஸ்.விஜயரத்தின உரையாற்றுவதையும், மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட சட்ட நிபுணர்கள் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

(படம்: அலுவலகப்படப்பிடிப்பாளர்)

# மலையகத்தில் புதிய அரசியல் கூட்டணி கொழும்பில் தலைவர்கள் சிலர் முயற்சி!

மலையகத்தில் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் இருக்கும் இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சி வேறுபாடின்றி சமூக ரீதியாக ஒன்றிணைப்பதே இம் முயற்சியாகும். இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

பொது வசதிகள், சமூக அபிவிருத்தி அமைச்சர் பெ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.வேலாயுதம், மனோ கணேசன், எஸ்.சதாசிவம் ஆகியோர் இம்முயற்சியில் ஈடுபட்டிருந்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

கடந்த தேர்தல்களில் இந்திய வம்சாவளி மக்களின் வாக்குகள், பல முனைப் போட்டிகளால் சிதறடிக்கப்பட்டன.

எதிர்காலத்தில் இப்படியான போட்டிகளைத் தவிர்த்து புரிந்துணர்வுடன் ஒரே குடையின் கீழ் செயல்படுவதை உறுதிப்படுத்துவதே புதிய கூட்டணியின் நோக்கமாகும்.

நுவரெலியா மாவட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன், சதாசிவம் எம்.பி. ஆகியோர் தலைமையிலும், ஊவாவில் வேலாயுதம் எம்பி. மாகாணசபை உறுப்பினர் டி.வி.சென்னன், எஸ்.சச்சிதானந்தன் ஆகியோர் தலைமையிலும், சப்ரகமுவவில் மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.டி.இராஜன் தலைமையிலும் மேல் மாகாணத்தில் மகோ கணேசன் எம்.பி., பி.இராதாகிருஷ்ணன் எம்பி. முன்னாள் அமைச்சர் பி.பி.தேவராஜ் ஆகியோர் தலைமையிலும் புதிய கூட்டணியை உருவாக்க முயற்சிகள் நடைபெறுகின்றன என்று அறியப்படுகிறது.

இதேவேளை, இ.தொ.கா.விலிருந்து பிரிந்துசென்ற அதிருப்தியாளர்களையும் புதிய கூட்டணியில் இணைத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

முதற்கட்ட கலந்துரையாடலில் குறிப்பிட்ட சிலர் மட்டுமே கலந்துகொண்டனர்.

## இந்து சமுத்திர சுற்றுவட்ட நாடுகள் வர்த்தக,பொருளாதார அபிவிருத்தி ஒப்பந்தம்

### இன்று மாநாட்டின் இறுதிநாள்; பிரதமர் சிறப்புரை

பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர சுற்றுவட்ட அமைப்பின் அங்கத்துவ நாடுகளுக்கிடையே வர்த்தக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும்.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ நேற்றுக்காலை இந்த அமைப்பின் நான்காவது அமைச்சர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது இதனைத் தெரிவித்தார். இந்த மாநாடு நேற்றுக்காலை கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் ஆரம்பமானது 18 நாடுகளின் அமைச்சர்கள், பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

அமைச்சர் டிரோன் தொடர்ந்து பேசுகையில், அங்கத்துவ நாடுகளுக்கு மத்தியில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்க ஓமான் விருப்பம் தெரிவித்துள்ளது, மீன்பிடி அபிவிருத்திக்கான நிதியமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார்.

இம்மாநாட்டின் இன்றைய இறுதி நாள் சம்பிரதாயபூர்வ அமர்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்.

## விபத்தில் போராளி மரணம்!

கிளிநொச்சி,ஒக்.13

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் போராளி ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா சாஸ்திரிகூளாங்குளத்தை வசிப்பிடமாகக் கொண்ட 2ஆம் லெப்டினன்ட் ஆழிவேந்தன் (கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்) என்ற போராளியே உயிரிழந்தவராவார்.

இவரது வித்துடல் இன்று வவுனியாவுக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கக்கப்படவுள்ளது. (ஐ-9-164)

## தவறிவிட்டது

முத்து தருமதுரை என்பவரின் தேசிய அ.அ. (803175950V) வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரம் (PHOTO COPY), சிறு தொகைப் பணம் மற்றும் முக்கிய ஆவணங்களுடன் பேர்ஸ் 12-10-2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுந்தரலிங்கம் சசிக்குமார், வரியப்புலம் சுன்னாகம் OR வாசுகி படமாடம் சுன்னாகம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (23608)

# தமிழரசுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருப்பதாக நேற்றைய கூட்டத்தில கலந்துகொண்ட மாவை சேனாதிராஜா தெரிவித்தார். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினரான கு.சே. குலநாயகம் தலைமையில் நடைபெற்ற நேற்றைய கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமகாராசா, பொ.கனகசபாபதி, வி.ஜி. தங்கவேல், யாழ் .பல்கலைக்கழக பேராசிரியர்களான சி.க.சிற்றம்பலம், எஸ்.சத்திய சீலன், கா.குகபாலன் உட்பட நூற்றுக்கணக்கான தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைமைப்பீடத்தில் உள்ளவர்களின செயற்பாடுகள் திருப்தி அளிப்பதாக இல்லை. அவர்கள் தன்னிச்சையாக செயற்படுகின்றனர். இதனால், தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சியும் அழிவடைந்து வருகிறது.

எனவே, தமிழரசுக்கட்சியை தொகுதி ரீதியாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆதரவாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து தமிழரசுக் கட்சியைப் புனரமைப்புச் செய்வதற்கு தொகுதி ரீதியாக 15 பேர் கொண்ட குழுவை நியமிப்பது என்றும், மிக விரைவில் வடக்கு - கிழக்கு மாகாண ரீதியாக மாபெரும் கட்சி மாநாட்டை நடத்துவது என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

புனரமைப்புக்கென தொகுதி ரீதியாக தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் க.சச்சிதானந்தசிவம், நல்லூர் க.யோகராசா, மானிப்பாய் கே.பரமேஸ்வரலிங்கம், காங்கேசன்துறை சி.சிவமகாராசா, சாவகச்சேரி டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், கோப்பாய் கோ.கிருஷ்ணராசா, உடுப்பிட்டி வி.ஜி.தங்கவேல், ஊர்காவற்றுறை எஸ்.நடராசா, கா.தர்மலிங்கம், வட்டுக்கோட்டை சி.க.சிற்றம்பலம்.

இவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, பொ.கனகசபாபதி மற்றும் கு. சே. குலநாயகம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்குழுவினர் அடுத்தவாரம் ஒன்றுகூடி கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஆராயவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை உறுப்பினர்களும இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5-ரி)

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா வசந்தானந்தன்

நாரந்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா வசந்தானந்தன் நெதர்லாந்தில் 08.10.2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா-கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சில்வா வீதி, வட்டக்கச்சியைச் சேர்ந்த C.T.B. தியாகராசா இராசலெட்சுமியின் அன்பு மருமகனும் கலைச்செல்வியின் (கலாநிதி, நெதர்லாந்து) அன்புக் கணவரும் கேமலா, ராம்ஜி (நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சி.மகேஸ்வரி, ந.பத்மநாதன் (அதிபர், யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்), ந.தங்கவேல் (ஆசிரியர்,யா/இந்துக்கல்லூரி), ந.நடேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் இ.சிவானந்தன், திருமதி குமரவல்லி பத்மநாதன் (ஆசிரியை, கொ/கக்கிரிய முஸ்லிம் மகாவித்தியாலயம், கொழும்பு), திருமதி சசிகலா தங்கவேல் (ஆசிரியை, யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), செந்தமிழ்ச்செல்வன் (கண்ணன்-பிரான்ஸ்), செந்தமிழ்செல்வி (மீனா- ஆசிரியை, கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), கலைச்செல்வன் (ரங்கன்-பிரான்ஸ்), ஜெயச்செல்வி (ஜமுனா-பிரான்ஸ்), ஜெயச்செல்வன் (முகுந்தன் -பிரான்ஸ்), செழுங்கதிர்ச்செல்வி (கௌரி-லண்டன்), செழுங்கதிர்செல்வன் (கேசன்-நெதர்லாந்து), தங்கத்தமிழ்செல்வன் (வைகுந்தன்-சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.10.2003 புதன்கிழமை நெதர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*56/3, கலட்டி அம்மன் றோட்,*
*யாழ்ப்பாணம்.*
T.P: 077 6147143
0031181393842.

தகவல்:
குடும்பத்தினர்.
Karelde Stoute Str-12
3222 CP, Hellevoetsuis
Holland.

(23609) (29-12-17-31)

## தம்பையா சிவராஜா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட தம்பையா சிவராஜா 11.10.2003 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - செல்லம் தம்பதியினரின் புதல்வரும் மனோரமாவின் அன்புக் கணவரும் சிவரூபன், சிந்துஜா, சிவரூபினி ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவசாமி, இராசையா, அன்னலட்சுமி மற்றும் துரைச்சாமி, தம்பிராசா, இராஜதுரை, தர்மபூபதி, மங்கயர்க்கரசி, பங்கஜமலர், சர்வானந்தன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்பு:*
*65/103 விஸ்ட்வைக் வீதி,*
*கொழும்பு-15.*
*தொ.பே.இல. : 01-2521701.*

தகவல்:
த.சர்வானந்தன் (சகோதரன்).

(23611) (31-14-17)


## சேவை நயத்தல்



இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளராகக் கடமையாற்றி 2003.09.26இல் ஓய்வு பெற்ற **திரு.கா.உருத்திரசுந்தரம்** அவர்கள் காரைநகர் மக்கள், அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் மகிழ்ச்சிகரமான போக்குவரத்திற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் நடைமுறைச் சாத்தியமான சிந்தனையுடன் செயலாற்றியமையை நயந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சிகரமானதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(23612)(14-17-31)

## மகளிர் பயிற்சி நிலையம்

பெண்களுக்கான
❁ தையல், கேக் ஐசிங், பெயின்ரிங்
❁ கூந்தல் அலங்காரம், முகஒப்பனை

போன்ற பயிற்சிகள் மிக குறுகிய காலத்தில் வழங்கப்படுகின்றன.

குறிப்பு:- கேக் ஐசிங் பயிற்சி புதிய பிரிவுக்கான வகுப்புகள் 15.10.2003 புதன்கிழமை காலை 10.30க்கு ஆரம்பம்.

கண்டி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(23610)(12-17-31)

**ராஜா** யாழ்ப்பாணம்

பிரசாந்த், கிரண், வடிவேல், நம்பியார் நடிப்பில்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று முதல்
சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டியராஜன் நடித்த
**ராமச்சந்திரா** (ரீல்ஸ்)
காட்சி நேரம் : 11.00, 3.00
வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் இரவு 7.00 காட்சியும் காண்பிக்கப்படும்.
(C/29908) (12-17-31)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விக்ரம், ஜோதிகா, விவேக்
**தூள்** (ரீல்ஸ்)
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
ஜக்கிஜான் நடித்த சண்டைப்படம்
**TUXE DO**
(13-16-31)(C/30657)

**லஷ்சுமி சினிமா** இணுவில்

பிரசாந்த், ஷாலினி, வையாபுரி நடித்த
**பிரியாத வரம் வேண்டும்** (ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 7.00 (பு.நே.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான பத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி பொலீஸார் நீதிவானிடம் கோரினர். ஆனால், இன்றுவரை அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிடடார்.

பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதாக நீதிவானின கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அதையடுத்து, யாழ்.ஆஸ்பத்திரிக்கு சென்ற நீதிவான், காயமடைந்தவர்களைப் பார்வையிட்டார். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் ஓட்டோ சாரதியின் வாக்குமூலத்தைப பதிவு செய்தார். (ஐ-3)

## ஆயுதத்தோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காரி ஒருவருக்கு பாதுகாப்பு வழங்கிய பொலீஸார் ஆயுதங்கள் சகிதம் பல்கலைக்கழகத்தினுள் பிரவேசித்தனர் என்று கூறப்படுகிறது.

அவ்வாறு ஆயுதங்களோடு பிரவேசித்த பொலீஸாருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையே முரண்பாடு உருவாகியது என்று மாணவர் ஒன்றியம் தெரிவித்திருக்கிறது.

இதனையடுத்து பொலீஸார் மற்றும் படையினர் இன்று முதல் ஆயுதங்களோடு செல்வதை பல்கலைக்கழகத்தினுள் அனுமதிப்பதில்லை என்ற தீர்மானத்தை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எடுத்தது என்று அறிவிக்கப்பட்டது. (ஐ-9)

## ஓட்டோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போது ஓட்டோச் சாரதியே விபத்துக்குக் காரணமாக இருந்திருக்கிறார் என்று தெரியவந்திருப்பதாகப் பொலீஸார் கூறினர். அதுமட்டுமன்றி, விபத்தில் ஓட்டோச் சாரதிக்குப் பெரிதாகக் காயங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. பின்னால் இருந்தவருக்கே காயம் ஏற்பட்டிருக்கிறது. இதனை வைத்துப் பார்க்கின்றபோது ஓட்டோச சாரதி விபத்துக்கு முன்னரே ஓட்டோவிலிருந்து குதித்திருக்கலாம் எனத் தாம் கருதுவதாகப் போக்குவரத்துப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

விபத்தில் சம்பந்தப்பட்ட 'பவள்' வாகனத்தைச் செலுத்திவந்த படைவீரர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டாரா, விசாரணை செய்யப்பட்டாரா என்பன போன்ற விவரங்களைத் தெரிவிக்கப் பொலீஸார் மறுத்துவிட்டனர். (ஐ-4)

## இராணுவ வாகனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கிடையே, அரியாலை மாம்பழம சந்தியில் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10.30 மணி முதல் சுமார் ஒரு மணிநேரம் மறியல் போராட்டம் இடம்பெற்றது. இந்த மறியல் போராட்டத்தில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களைச் சேர்ந்த பல செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

கண்காணிப்புக்குழு அலுவலகம் அமைந்துள்ள நல்லூர் கைலாசபிள்ளையார் கோயில் வீதி ஊடான போக்குவரத்து இதனால் ஒருமணிநேரம் தடைப்பட்டிருந்தது.

பத்திரிகையாளர் மீதான திட்டமிட்ட இராணுவத் தாக்குதல்களைக் கண்டிக்கும் வகையிலான கோசங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகள் சிலர் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளுடன் இது குறித்துக் கலந்துரையாடினர். பத்திரிகையாளர் மீதான இத்தகைய இராணுவத் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று கண்காணிப்புக் குழுவினரிடம் பத்திரிகையாளர் சங்கப்பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

செய்தியாளர்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டது. யாழ்.மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானமும் இந்த மறியற்போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தார். (ஐ-4)

# ஊடக விருது வழங்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யிட்வும் இல்லை. ஆனால், உதயனில் பணிபுரியும் பெரும்பாலான பத்திரிகையாளர்கள் தங்களின் சுயாதீன நிலை கருதி எந்த ஊடகவியலாளர் சங்கத்திலும் அங்கத்துவம் பெறாமல் இருக்கிறார்கள் என்பது உண்மையே. எண்பதுகளின் மத்தியில் இயக்கங்களின் பின்னணியோடு ஊடகவியலாளர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு அவற்றில் இணையும்படி வற்புறுத்தப்பட்ட போதும்கூட 'உதயன்' அலுவலக பத்திரிகையாளர்கள் மசிந்து கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், வடக்கில் தற்போது சுயாதீனமாக இயங்கும் இரண்டு ஊடகவியலாளர் சங்கங்களினதும் பொதுவான நடவடிக்கைகளிலும் செயற்பாடுகளிலும் அங்கத்துவம் பெறாமலேயே அவர்கள் தவறாது பங்குபற்றி வருவது வழமை. நேற்றுக் காலை நல்லூரில் கண்காணிப்புக்குழுவின் அலுவலகம் முன்னால் யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கம் நடத்திய பத்திரிகையாளர்களின் மறியல் போராட்டத்தில் 'உதயன்' ஆசிரியர் உட்பட பெரும்பாலான ஆசிரியர் பீட உறுப்பினர்கள் பங்குபற்றினர். அதேபோன்று நேற்று மாலை இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கொழும்பில் நடத்திய விருதுவழங்கும் விழாவில் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டிருந்த 'உதயன்' ஆசிரியரும் மற்றும் 'சுடர்ஒளி' செய்தியாளர்களும் பங்குபற்றினர். நேற்றைய விருது வழங்கும் விழாவில் பிரதேச ரீதியாக பாராட்டப்பட்டவர்களில் ஒருவர் உதயனின் செய்தியாளர். அவர் ஊடகவியலாளர் சங்கங்களில் இணைந்து செயற்படுபவர். அவருக்கு விருது கிடைத்ததையொட்டி 'உதயன்' நிர்வாகம் அவருக்கு விசேட பாராட்டுகளை அனுப்பிவைத்திருந்தது.

1. ஒரு பத்திரிகை நிறுவனம் மீதும அதன் நிர்வாகிகள் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்துப் பேசுவதற்கு அமைச்சர் மகேஸ்வரன் போனறவர்களுக்குத் தங்கள் மேடையில் இடம்கொடுத்து அத்தகையோரை வளர்க்கும் ஊடகவியலாளர் சங்கங்களில் அந்த நிறுவனத்தின் பத்திரிகையாளர்கள் எவரும் இணைந்து செயற்பட முன்வருவார்களா என்பது கேள்வியே.

2. நல்லூர் திருவிழாக் காலத்தில அமைச்சர் மகேஸ்வரன் ஆலய சுற்றாடலில் பக்தர்களுக்கு இடையூறாக தனது வாகனத்தில் பவனிவந்தார் என்ற செய்தி உதயனில் வெளியாகியிருந்தமை உண்மையே. எனினும், அமைச்சர் மகேஸ்வரன் தான் அவ்வாறு நடந்துகொண்டதை இதுவரை மறுக்கவில்லை. அந்தச் செய்தி வெளியாகிய காலத்தில்கூட அதற்கான மறுப்பு எதனையும் அவர் உதயனுக்கு அனுப்பிவைக்கவில்லை. எனவே, அந்தச் செய்தியில் கூறப்பட்ட தகவல் உண்மையானது என்று உதயன் - இப்போதும் உறுதியாகக் கூறுகின்றான்.

3. யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட இந்துசமய நிறுவன அலுவலர்கள் எவரையும் கீழ்த்தரமாக விமர்சிக்கும் செய்தியையோ, கருத்தையோ 'உதயன்' எப்போதும் பிரசுரித்ததில்லை. இந்தியாவில் பாலியல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்ட பிரேமானந்தா சுவாமிகளை 'உதயன்' நிர்வாகிகள் எவரும் நேரில்கூடக் கண்டதில்லை.

உதயன் நிர்வாகி தனது மனைவி சகிதம் பிரேமானந்தா சுவாமிகளின் காலில் வீழ்ந்து வணங்கும் படம் என்று தானே கூறிக்கொள்ளும் அந்தப் புகைப படத்தை வெளியிட அமைச்சர் மகேஸ்வரன் முன்வருவாரா என பகிரங்கமாக அவருக்கு சவால் விடுகின்றான உதயன் (ஐ)


## கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2004
இருப்பு மதிப்பீடு
Tue.,Thur. - 3- 4
ஆரம்பம்:
14.10.2003-Tues. 3 p.m.
(23603)(12)
விக்னா
கல்வி நிறுவனம்

## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(29--12) (23489)

## CHEMISTRY CENTRE
Temple Rd ,நல்லூர்
DAY CLASS
புதிய பிரிவு
இன்று ஆரம்பம்:- 3p.m.
PHY: Mon., Tue., Thur., Fri.
By: யோகானந்தா
CHE: Tue., Fri. 4 - 5
By: அன்பழகன்
Bio: Mon., Fri. 5 - 6
By: தற்பரன்
Maths: Mon., Wed., Fri. 5 - 6
By: ராஜன்
(C/30680)

## கணனிப் பாடநெறிகள்
Diploma in Desk Top publishing
Diploma in Computer Studies
Computer Hardware
Ms office 2000
Maya
(23576)
விவரங்களுக்கு:
IMS
Institute of Micro Systems
Market lane, Manipay.

## வெளிவந்துவிட்டது
G.C.E.(O/L) 2003
திரிகோண கணிதம் (15/=)
மாதிரி வினாத்தாள் பகுதி I+II (15/=)
N. கேதீஸ் - மீசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை-யாழ்.
ஸ்ரீலங்கா புத்தகசாலை-யாழ்.
எக்சலன்ற் - மீசாலை
பிறைற்மன் - யாழ்.
(23598) (26)

## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி...!
இன்றுமுதல் UR 60 Maxell - Green (பச்சை) ஓடியோ கசற்றினை மீளவும் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.
ராஜ் பிறதர்ஸ் எலெக்ரோனிக்.
75, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (23573)

## மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு மாபெரும் சிறப்புத் தள்ளுபடியில் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி விற்பனையாகின்றது.
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
உத்தரவாதம் உண்டு
HAND PHONE UNLOCK செய்துதரப்படும்
HAND PHONE பழுது பார்க்கப்படும்.
I.D.D இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிக்கொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது. 24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்கள் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும். எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத் தருகின்றோம். இசசேவை அன்ரனா மூலம் இயங்கக்கூடியது.
மேலதிக விவரங்களுக்கு:
பவர் செல்லுலர் ரேடிங் கம்பனி,
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 0712 399220
021 222 7070
0777 242416
0712 384624
(23592) (29-12-17)

உங்கள் ஸ்தாபனத்தின் பெயரை மீண்டும் ஒருமுறை விளம்பரமாக்குங்கள்
## கலண்டர் - 2004
2004 ஆம் ஆண்டிற்கான கலண்டர் வேலைகள் யாவற்றையும் தரமான முறையில் பிறின்டிங் செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய முன்னணி ஸ்தாபனம்
ராம் பிறின்ரேஸ் கிராபிக்ஸ்
51, இலுப்பையடிச்சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
மேற்படி நிறுவனத்தில் நல்ல நிலையில் உள்ள கடைப் பாவனைக்கு உகந்த இரண்டு சோடி பெரிய கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு.

## CAREER.COM INSTITUTE
யாழ். நகரின் உயர் கற்கைநெறியின் முன்னோடி நிறுவனமாகிய நாம் யாழ். நகரில் முதன் முதலாக
Canadian Institute of Information Technology College
உடன் இணைந்து
CAT
(Certified Course in Accounting & IT )
என்னும் புதிய கற்கைநெறிக்கு உங்களை அழைத்துச் செல்கிறோம். CMA Canada வின் வழிநடத்தலில் SriLankaவில் 2003 June இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு 'கணக்கியலுடன் கூடிய கணனி கற்கைநெறி' ஒரு வருடத்தில் நீங்களும் ஒரு கணனியுடனான கணக்கியல் வல்லுநராக வழிகாட்டுகிறோம்.
2004 June பரீட்சைக்குரிய
CAT, aat st - I,II&III இற்குரிய அனுமதிகள் ஏற்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு:
Career.com Institute,
79, Main Street, Jaffna.
(C/30664) (22-13-16)
Our IT training Center
Canadian Institute of Information Technology College.


## மரண அறிவித்தல்

### இராமையா விநாயகமூர்த்தி
(ஐயப்பன் ரேடர்ஸ் உரிமையாளர் - கிளிநொச்சி)

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸைத் தறகாலிக வதிவிடமாகவும் கொண்ட இராமையா விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் இராமையா - கனகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புக் கணவரும் காண்டீபன் (பிரான்ஸ்), சோபனா (ஜேர்மனி), பிரியா (பிரான்ஸ்), பரணிதரன் (புங்குடுதீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமநாதன் (சாவகச்சேரி), கண்ணையா (யாழ்ப்பாணம்), கோமதி (உருத்திரபுரம்), தேசிங்கராஜா (பிரான்ஸ்), கேதீஸ்வரி (லண்டன்), உமாபரமேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச சகோதரரும் யோகேஸ்வரனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் தவமணி, இராஜேஸ்வரி (சுவிஸ்), பாலாம்பிகை, சந்திரலேகா (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/9,குறோசெற் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கற்பகப்பிள்ளையார் கோயிலடி)

தகவல்:
திருமதி இ.கனகம்மா (தாயார்),
இ.கண்ணையா (சகோதரம்).
(23613)(12-17-29)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org